ஆரம்பக் கல்வி

ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் : பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ. 3.] [தனி இதழ் அணா 4

மலர் 20 } ஜூன் 1959 { இதழ் 6

அறிஞர்கள் காட்டியுள்ள அபாய அறிகுறி!

பேராசிரியர் இரத்தினசாமி : தென்னகம் பெற்றுள்ள பெறற்கரிய பெட்டகங்களில் ஒருவர். கல்வித் துறையில் நீண்டகால அனுபவம் படைத்த பேராசிரியர். அண்ணமலைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர்.

முல்க் ராஜ் ஆனந்த் : வட இந்திய மக்கள் ஆயிரமாயிரவரின் உள்ளத்தை அள்ளிக்கொண்ட உயர் தனிச் சிறப்புள்ள எழுத்துச் சிற்பி, சிறந்த சிந்தனையாளர்.

டாக்டர் கார்வே : மராட்டிய மண்டலத்து மாணிக்கம்; பெண் கல்வியின் வளர்ச்சிக்காகத் தன் வாழ்வையே அர்ப்பணித்த அறிஞர் பெருந்தகை. இந்திய அரசாங்கத்தால் அண்மையில் பாராட்டுப் பட்டம் வழங்கப்பட்டுப் போற்றிப் புகழப்பட்ட பெருஞ்சிறப்புப் படைத்தவர்.

டாக்டர் சி. பி. இராமசாமி அய்யர்: சென்னை மாநிலத்திலும் திருவிதாங்கூர் தனியரசிலும், ஆட்சிப் பொறுப்பேற்று ஆழ்ந்த அனுபவம் அடைந்திருப்பவர். அரசாங்கத்தை நடத்திச் செல்லும் அரிய கலையில் அற்புதமான திறமையும் புலமையும் படைத்திருக்கும் மிகச் சிலரில் ஒருவர்.

மாஸ்டர் தாராசிங்: சீக்கிய மக்களின் ஈடு இணையற்ற தலைவர். சீக்கியர் தம் சமுதாயத்தில் இன்றையதினம் காணப்படும் புத்தெழுச்சியையும் புது உணர்ச்சியையும் உருவாக்கிய பெருமையும் புகழும் படைத்த பாஞ்சாலச் சிங்கம்.

சுனித் குமார் சாட்டர்ஜி: வங்க நாடு ஈன்ற இலக்கியத் தங்கங்களில் ஒருவர்; வடமொழியிலும், வங்க மொழியிலும், இலக்கிய ஆராய்ச்சியிலும், மொழிநூல் ஆராய்ச்சியிலும் தலைசிறந்த புலமை உடையவர். வங்க நாட்டவரின் பெருமதிப்புக்கு உரியவர்.

டாக்டர் ஜெயகர்: நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் வாய்ந்த முதுபெருந் தலைவர்; அறிவின் செல்வர்; காந்தியடிகளால் பாராட்டப்பட்ட பெருஞ் சிறப்பு உடையவர்.

மிர்சா இஸ்மெயில்: ஆட்சித் துறையில் முதிர்ந்த அனுபவமும் பழுத்த திறமையும் நிறைந்த அறிவும் ஒருங்கே பெற்றிருந்தவர். இந்தியத் துணைக் கண்டத்து இஸ்லாமிய அறிஞர்களில் ஒப்பற்ற புகழுடையவர்.

சி. இராஜகோபாலாச்சாரியார்: அறிமுகம் தேவையில்லாத உலகப் பிரமுகர். தென்னகத்தின் மூளை என வடநாட்டவரால் ஒருங்கே புகழப்படும் உயர்ந்த சிறப்புடையவர். இந்தியாவின் முன்னாள் கவர்னர் ஜெனரல்.

இந்தப் பேரறிஞர்கள் ஒன்பதின்மரும், இவர்களைப் போலவே அறிவின் திறமும் ஆட்சி அனுபவமும் சிந்தனைத் தெளிவும் செயல்துறை அனுபவமும் படைத்த வேறு பதின்மரும் ஆகமொத்தம் பத்தொன்பது அறிஞர்கள், ஏப்ரல் மாத இறுதியில், இந்தியப் பாராளு மன்றத்திற்கு ஓர் வேண்டுகோளை அனுப்பியிருக்கிறார்கள்.

அந்தப் பேரறிஞர்கள் பத்தொன்பது பேரும், அவர்கள் சமர்ப்பித்துள்ள அறிக்கையை, வேண்டுகோள் என்றுதான் மிக மிகப் பணிவோடும் அடக்கத்தோடும் தெரிவிக்கிறார்கள். ஆனால் இந்தியத் துணைக் கண்டத்தின் இன்றைய அரசியல் நிலையை நன்கறிந்த அத்தனைப் பேரும் அந்த அறிக்கையை, இந்தியப் பாராளு மன்றத்திற்கும், அந்த மன்றத்தின் மூலம் இந்திய அரசாங்கத்திற்கும் காட்டப்பட்டுள்ள ஓர் அபாய அறிவிப்பு என்றே கருதுவார்கள்.

உண்மையிலேயே அந்த அறிக்கை, பொருத்தமான நேரத்தில் தகுதியுள்ள அறிஞர்களால் தேவையுள்ள ஆட்சியினருக்குத் திட்ட வட்டமான முறையில் காட்டப்பட்டுள்ள அபாயக் கொடியேயாகும்.

1965-ம் ஆண்டிலிருந்து, இந்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழியாகவும், பல்வேறு மாநில அரசாங்கங்களுக்கும் இந்திய அரசாங்கத்துக்குமுள்ள தொடர்பு மொழியாகவும், இப்போதுள்ள ஆங்கிலத்துக்குப் பதிலாக இந்தி மொழியே அரியணையில் ஏற்றப்பட வேண்டுமென்று இந்திய அரசியல் திட்டம் தெரிவிக்கிறதல்லவா? அரசியல் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அந்தக் கட்டளையை எழுத்துக்கு எழுத்து அப்படியே நிறைவேற்றியாக வேண்டுமென்று, வடநாட்டிலுள்ள இந்தி மொழிப் பித்தர்கள் பலர் துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கிறார்கள் அல்லவா? அவர்களுடைய அர்த்தமற்ற துடிதுடிப்புக்கும் அவசியமற்ற ஆவேசத்துக்கும் இணங்குகிற வகையிலேயே இந்திய அரசாங்கத்தின் போக்கும் நோக்கும் காணப்படுகின்றன அல்லவா? இந்த விபரீதமான மனப்போக்காலும் விசித்திரமான நோக்கத்தாலும் இந்தியாவிற்கு ஏற்படக்கூடிய பேராபத்தைத்தான் தெள்ளத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் எடுத்துக் காட்டி எச்சரித்திருக்கிறது பேரறிஞர்கள் பத்தொன்பது பேரின் அறிக்கை.

இப்போதுள்ள ஆங்கிலத்துக்கு மாற்றாக இந்தி மொழியை இந்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழியாக ஆக்குவதால் இந்தியத் துணைக்கண்டத்துக்குத் துளியளவும் நன்மையில்லை; நன்மையில்லாதது மட்டுமல்ல — அளவற்ற தீமையே விளையும் என்பதை எவராலும் மறுக்க முடியாத வகையில் எடுத்துக்காட்டியிருக்கிறது மேற்படி அறிக்கை.

வீண் பிடிவாதம் காரணமாக இந்தி மொழியை மத்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழியாகத் திணித்தே தீர்வது என்று இந்திய அரசாங்கத்தார் முடிவு செய்து விடுவார்களானால், அந்த விபரீதமான முடிவின் காரணமாக இந்தியத் துணைக் கண்டத்தின் ஒற்றுமைக்குப் பேராபத்து ஏற்படும் என்பதையும், இந்தி மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்களுக்கும் ஏனைய மொழியாளருக்கும் இடையே மாபெரும் பிளவும் பகையும் உருவாகக்கூடும் என்பதையும்கூட அந்த அறிக்கை சுட்டிக் காட்டத் தவறவில்லை.

இந்தியாவில் இப்போது தோன்றியுள்ள மொழிப் பிரச்சினையின் முழு உருவத்தையும் ஆர அமர இருந்து சிந்தித்துப் பார்க்கும் எவரும், அறிஞர்கள் காட்டியுள்ள அந்த அபாய அறிகுறி முற்றிலும் நியாயமானது என்பதை மறுக்காமல் ஒப்புக்கொள்வார்கள்.

இந்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழியாவதற்குரிய தகுதி இன்னமும் இந்தி மொழிக்கு ஏற்படவில்லை என்பது உலகம் அறிந்த உண்மை. இலக்கிய வளமும் இலக்கணச் சிறப்பும் இன்னமும் இந்தி மொழியில் போதுமான அளவுக்கு உருவாகவில்லை. ஆட்சித் துறையில் பல்வேறு பிரிவுகளிலும் பயன்படுத்தப்பட வேண்டிய சொற்கள் — சொற்றொடர்களை இந்தி மொழியில் காணவே முடியாது. சட்டம், நீதி, அரசாங்க நிர்வாகம், இராணுவம் முதலிய பல துறைகளிலும் திட்டவட்டமாக வரையறுக்கப்பட்ட பொருளோடு பயன்படுத்தப்படவேண்டிய சொற்கள் ஏராளம். அத்தகு சொற்களை யெல்லாம் இனிமேல்தான் இந்தி மொழியில் உருவாக்க வேண்டும். இத்தகைய தகுதி இந்திமொழிக்கு ஏற்படுவதற்கு நீண்ட காலம் பிடிக்கும். அத்தகைய காலம் வரும்வரை இந்தி மொழியை ஆட்சிப் பீடத்தில் அமர்த்துவது பற்றி எண்ணிப் பார்ப்பதுகூட வீண் வேலையே ஆகும்.

அத்தகைய தகுதி இந்தி மொழிக்கு இப்போதே இருப்பதாக வைத்துக்கொண்டால்கூட, இந்தியை ஆட்சி மொழியாக்குவது முறையாகாது. ஏனெனில், இந்தி ஆட்சி மொழியானல், இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்களுக்கு மட்டும், இந்திய அரசாங்கத்திலும் அரசியல் உலகத்திலும் தனிச் செல்வாக்கு ஏற்பட்டுவிடும். தமிழ், தெலுங்கு, மலையாளம், குஜராத்தி முதலிய ஏனைய மொழிகளைத் தாய் மொழிகளாக்க் கொண்டவர்களுக்கு அந்தச் செல்வாக்கு இருக்க முடியாது. எந்தக் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தாலும் இப்படி ஒரு நிலை உருவாவது, இந்தியாவின் எதிர் காலத்துக்கு நன்மை பயப்பதாகாது. இப்போதே, இந்தி மொழியாளருக்கும் இந்தியாவில் உள்ள ஏனைய மொழியாளருக்குமிடையே நல்ல உறவு இல்லை; பற்றும் பாசமும் இல்லை. இன்றைய நிலையிலேயே இந்திய நாட்டு அரசியலிலும் இந்திய அரசாங்க நடைமுறையிலும் இந்தி மொழியாளருக்கு அளவுக்கு மீறிய செல்வாக்கும் அதிகாரமும் ஏற்பட்டிருப்பதாக ஏனைய மொழியாளர்களின் உள்ளத்தில் ஒரு கருத்து வேரூன்றியிருக்கிறது. தாங்களும், தங்கள் மொழிகளும், தங்களுடைய மாநிலங்களும் புறக்கணிக்கப்படுவதாகவும் அவர்கள் கருதுகிறார்கள். இத்தகைய விபரீதமான நிலையில், இந்தி மொழியானது ஆட்சி மொழியாகவும் ஆக்கப்பட்டுவிட்டால், இந்தி மொழியாளருக்கும் பிற மொழியாளருக்குமிடையேயுள்ள உறவு, பல மடங்கு மோசமாகி விடக்கூடும்.

இந்தி மொழித் திணிப்பு முயற்சியானது, இந்திய ஒற்றுமைக்குக் கேடு பயப்பது மட்டுமல்ல—அளவுக்கு மீறிய பணச் செலவை ஏற்படுத்துவதும் ஆகும். ஆங்கிலத்துக்குப் பதிலாக இந்தி மொழியை

ஆட்சி மொழியாக்க வேண்டுமானால் அதற்கு உரிய தகுதியை அந்த மொழியிடம் உருவாக்க வேண்டும். அப்படி உருவாக்க வேண்டுமானால், அதற்காகவென்றே ஆண்டுதோறும் பல கோடி ரூபாய்களைச் செலவழித்துத் தீரவேண்டும். குறைந்தது ஐம்பது ஆண்டுகளுக்காவது ஆண்டுதோறும் இவ்வாறு பெருந்தொகையை அள்ளி அள்ளி இறைத்துக்கொண்டிருந்தால்தான் ஆட்சி மொழித் தகுதியை இந்தி மொழியிடம் ஏற்படுத்த முடியும். ஆயிரமாயிரம் மக்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தால் வாடி வதங்கி வேதனையால் தத்தளிக்கும் இன்றைய நிலையில், கிடைக்கும் பணத்தையெல்லாம், வேலை வாய்ப்புகளைப் பெருக்குவதற்காகவும் புதிய தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்காகவுமே செலவழித்தல் முறை. நூறாயிரக் கணக்கான மக்கள் வறுமை நச்சரவத்தால் சுற்றி வளைக்கப்பட்டுள்ள இந்த நிலையில் அந்த அரவத்தை மண்டையிலடித்து மாய்ப்பதுதான் ஆட்சியாளரின் முதற்பெருங் கடமையாக இருக்க வேண்டும். திரட்டக்கூடிய செல்வத்தையெல்லாம் இந்த வறுமை ஒழிப்புப் பணியில் ஈடுபடுத்துவதுதான் அறநெறியாகவும் சிறந்த வழியாகவும் இருக்க அதனை விடுத்துவிட்டு இந்தி மொழித் திணிப்புக்காக அதனைச் செலவழிப்பது எப்படி முறையாகும்?

ஆகவே இந்தி மொழியை இந்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழியாக ஆக்க எண்ணும் எந்த முயற்சியாலும் இந்தியாவின் ஒற்றுமைக்கும் நல்வாழ்வுக்கும் முன்னேற்றத்துக்கும் கெடுதியே விளையும் என்பது உறுதியிலும் உறுதியாகும்.

ஆனால் அதற்கு மாறாக, ஆங்கிலத்தையே இந்தியாவின் ஆட்சி மொழியாக என்றென்றும் தொடர்ந்து வைத்துக்கொள்வதால் எத்தகைய தீமையும் இல்லை. தீமை இல்லாதது மட்டுமல்ல, எல்லா வகையான நன்மைகளும் உண்டு.

1. சென்ற இரண்டு நூற்றாண்டுகளாக ஆங்கிலமே இந்தியாவின் ஆட்சி மொழியாக மிகச் சிறப்புடன் விளங்கியிருக்கிறது. ஆட்சி மொழியாக இருப்பதற்குரிய எல்லா வகைத் தகுதிகளையும் அம் மொழி ஏற்கெனவே பெற்றிருக்கிறது. எனவே அதனை ஆட்சி மொழியாக்குவதற்காக மேற்கொண்டு ஒரு புதிய காசு கூடச் செலவழிக்கவேண்டிய தேவையில்லை.

2. ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருப்பதால் இந்தியாவில் உள்ள எந்த ஒரு மொழியினருக்கும் எந்த ஒரு தனிச் சலுகையும் இருக்க முடியாது. இந்தி, ஆட்சி மொழியாக இருந்தால் இந்தி மொழியினருக்கு மட்டும், பிற மொழியினர் யாவர்க்கும் இருக்க முடியாத ஒரு தனிச் சலுகை, ஒரு தனிச் செல்வாக்கு இருக்கும்.

ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருந்தால், அப்படிப்பட்ட விபரீதமான நிலை உருவாக முடியாது. எந்த ஒரு மொழியினருக்கும் தனிச் செல்வாக்கு இருக்க முடியாது. காரணத்தால், ஆட்சி மொழி காரணமாக, ஒரு மொழியினருக்கும் மற்றொரு மொழியினருக்குமிடையே எத்தகைய பகையும் பிணக்கும் ஏற்பட முடியாது. ஒற்றுமை குலையாது.

3. இந்தி மொழி ஆட்சி மொழியாக இருந்தால், அந்த மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் அந்த மொழி ஒன்றை மட்டுமே படித்தால் போதும்—ஆனால் ஏனைய மொழியினர் யாவரும் தம் தாய் மொழியோடு இந்தி மொழியையும் படித்தாகவேண்டும். இந்தி மொழியாளர்கட்கு ஒரு புது மொழியைக் கற்றாகவேண்டிய அறிவுச் சுமை இல்லாமல் மற்றவர்கட்கு மட்டும் அந்தச் சுமை இருப்பது, இரு சாராருக்கிடையே ஏற்றத் தாழ்வையும், அதன் காரணமாக மனத் தாங்கலையும் உருவாக்கும். ஆனால் ஆங்கிலமே ஆட்சி மொழியாக இருந்தால், இந்திய மக்கள் அனைவருமே, தம் தாய்மொழியையும் ஆங்கில மொழியையும் கற்றாகவேண்டிய சம நிலையில் இருப்பர். ஏற்றத் தாழ்வு ஏதும் இராது.

4. இந்தியே ஆட்சிமொழியாக இருந்தால்கூட, உலகத்தின் ஏனைய நாடுகளோடு தொடர்பு கொள்ளவும், வேகமாக வளர்ந்து வரும் விஞ்ஞான அறிவை அடையவும், ஏனைய பல மொழிகளில் உள்ள இலக்கியச் செல்வங்களைக் கற்று மகிழவும் ஆங்கில மொழிப் பயிற்சி கட்டாயமாகத் தேவைப்படும். ஆகவே இந்தி மொழி ஆட்சி மொழியாக இருந்தால், இந்திய மாணவர்கள், தாய் மொழி—இந்தி—ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளைக் கற்றாக வேண்டும். அதற்கு மாறாக ஆங்கிலமே ஆட்சி மொழியாக இருக்குமானால், தாய் மொழி —ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளை மட்டும் கற்றால் போதும். மாணவர்கள்மீது சுமத்தப்படும் பளு குறையும்.

"ஆங்கிலமே ஆட்சிமொழியாக விளங்குவதால் இத்தனை நன்மைகளும் உள்ளன என்பது உண்மைதான். இந்தி மொழியை ஆட்சிப் பீடத்தில் அமர்த்துவதால் எண்ணற்ற கெடுதிகள் உருவாகும் என்பதும் மறுக்க முடியாததுதான். என்றாலும் ஆங்கிலம் நமக்கு அன்னிய மொழி அல்லவா? ஓர் அன்னிய மொழியை இந்தியாவின் ஆட்சி மொழியாக்குவது முறையாகுமா?" என்று சிலர் கேட்கிறார்கள். அப்படிக் கேட்கின்றவர்களைப் பார்த்து நாமும் திருப்பி அன்போடும் பணிவோடும் கேட்க ஆசைப்படுகிறோம் :—ஆங்கிலம் அன்னிய மொழி என்றால், இந்தியைத் தாய் மொழியாகக் கொள்ளாத ஏனைய இந்திய மக்களுக்கெல்லாம் இந்திமட்டும் என்ன மொழி? ஆங்கிலம் எந்த அளவுக்கு அன்னிய மொழியோ அதே அளவுக்கு

இந்தி மொழியும் அவர்களுக்கு அன்னிய மொழிதானே? இரண்டும் அன்னிய மொழிகளே என்று ஏற்படும்போது, இரண்டு அன்னிய மொழிகளில் எந்த மொழி சிறப்பான மொழி என்பதைத்தானே கவனிக்க வேண்டும்? அப்படிக் கவனித்தால் ஆங்கில மொழிதானே இந்தி மொழியைவிட எல்லா வகைகளிலும் உயர்வும் சிறப்பும் வலிவும் பொலிவும் பெற்றுத் திகழும் சீரிய மொழி?

இருப்புத் தொடர் வண்டியும் வானூர்தியும் அன்னிய நாட்டவர் கண்டுபிடித்துத் தந்தவைதான். அவற்றை, அன்னிய நாட்டவர் அளித்தவை என்பதற்காக நாம் வெறுத்து ஒதுக்கித் தள்ளியா வைத்துவிட்டோம்?

இன்றைய இந்திய அரசியல் திட்டத்தின் பெரும் பகுதி இங்கிலாந்து அமெரிக்கா முதலிய அன்னிய நாட்டவர்களின் அரசியல் திட்டங்களைப் பார்த்து எழுதப்பட்டதுதான். சேச்சே—நம் அரசியல் திட்டத்தில் அன்னிய நாட்டுத் திட்டங்களின் வாடை அடிக்கிறது—ஆகவே அது வேண்டாம் என்று நாம் இயம்பிவிட்டோம்?

பொதுத் தேர்தல் என்று ஒன்றை நடத்தி, சட்ட மன்ற உறுப்பினர்கள் என்று சிலரைத் தேர்ந்தெடுத்து, அவர்களில் பெரும்பான்மையோர் எந்தக் கட்சியினர் என்பதைக் கண்டறிந்து, அந்தக் கட்சியிடம் ஆட்சியை ஒப்படைக்கிற பாராளுமன்றக் குடியாட்சி முறைகூட இங்கிலாந்து முதலிய பிற நாடுகளிடமிருந்து நாம் பெற்ற நன்கொடைதான். பிற நாட்டில் உருவாகிய ஏற்பாடு அது என்ற காரணத்திற்காக அதனை நாம் ஏற்காமலா போய்விட்டோம்?

பிற நாட்டவரின் இத்தனைப் பொருள்களையும் ஏற்பாடுகளையும் திட்டங்களையும் முறைகளையும் வாயாரப் பாராட்டி மனமார ஏற்றுக்கொண்டிருக்கிற நாம், ஆங்கில மொழி ஒன்றை மட்டும், அது அன்னியப் பொருள் என்கிற காரணத்தால் ஒதுக்கி வைக்க வேண்டும் என்று கூறுவது எவ்வகையில் நியாயமாகும்?

ஆகவே எந்தக் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தாலும், ஆங்கில மொழியைத் தொடர்ந்து இந்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழியாக வைத்திருப்பதுதான் நாட்டின் நலத்திற்கு உகந்த நல்லதோர் ஏற்பாடு என்கிற உண்மை வெள்ளிடை மலையென விளக்கமாகிறது.

அந்த மாபெரும் உண்மையைத்தான் மிகச் சிறந்த வகையில் நினைப்பூட்டியிருக்கிறார்கள் பேரறிவாளர்கள் பததொன்பது பேர். அந்த அறிஞர் பெருமக்களுக்கு நம் அன்பு கலந்த நன்றி உரியது ஆகுக.

விழுமிய பண்புகள் கெழுமிய அன்னை

[மா. இளஞ்செழியன். எம். ஏ.]

"யார் தம்பி நீ? யாரைப் பார்க்கவேண்டும்?"

"நான் இன்னாருடைய மகன். தங்களைப் பார்க்கத்தான் வந்தேன்."

"அப்படியா? மெத்த மகிழ்ச்சி! செய்தி என்ன? என்னால் ஆகக்கூடிய உதவி ஏதாவது இருக்கிறதா?"

"ஆமாம். நான் இன்டர்மீடியட் தேறியிருக்கிறேன். பி. காம். வகுப்பில் இடம் வேண்டும். யார் யாரையோ அண்டிப் பார்த்தேன். கிடைக்கவில்லை. தாங்கள் மனம் வைத்தால் கட்டாயம் கிடைக்கும்."

"நல்ல பிள்ளையாகக் காணப்படுகிறாய். அவசியம் செய்கிறேன். நாளை காலையில் வா செட்டியார் ஒருவர் இருக்கிறார். அவரிடம் அழைத்துச் செல்கிறேன். கட்டாயம் இடம் கிடைக்கும்.

* * *

"வா அப்பா. உட்கார். என்னைப் பார்க்கத்தானே வந்தாய்?"

"ஆமாம். பி. ஏ. பட்டம் பெற்று இரண்டு ஆண்டுகள் ஆகின்

றனே. தேடித் தேடிப் பார்க்கிறேன். வேலை எதுவும் கிடைக்கவில்லை. இரண்டு தங்கைகள். மூன்று தம்பிகள். பெரிய குடும்பம். தந்தையாரின் வருமானம் மாதம் எழுபது ரூபாய்தான். மிகவும் அயரப்படுகிறோம்."

"வருத்தப்படாதே அப்பா. உன் குடும்பத்தில் மட்டுமல்ல. தமிழ்நாட்டில் ஆயிரக்கணக்கான குடும்பங்களில் இப்படிப்பட்ட நிலைதான் இருக்கிறது. என்ன செய்வது. உன்னுடைய பி. ஏ. பட்ட நற்சான்றிதழ் முதலியவற்றை எடுத்துக்கொண்டு மாலை நான்கு மணிக்கு வா. தெரிந்தவர் ஒருவர் இருக்கிறார். அவருடைய கம்பெனியில் வேலை தரச் சொல்கிறேன்."

* * *

"யாரம்மா நீ? ஏன் அழுகிறாய்? இவ்வளவு இளம் வயதிலே உனக்கு என்னம்மா துக்கம்?"

"என் வாழ்க்கையே பறிபோய்விட்டது டாக்டரம்மா. என் வாழ்வே போய்விட்டது. இளம் வாலிபர் ஒருவர் என்னை மனமாரக் காதலித்துத் திருமணமும் செய்துகொண்டு ஓராண்டுக்காலக் குடும்ப வாழ்க்கைக்குப் பிறகு கைவிட்டு விட்டார். பெற்றோரின் விருப்பத்துக்கு மாருக அந்த வாலிபரை நான் மணம் செய்துகொண்டதால் என் பெற்றோர்களும் என்னைத் திரும்பிப் பார்க்க மறுக்கிறார்கள். டாக்டரம்மா, நீங்கள்தான் என்னைக் காப்பாற்றவேண்டும்."

"உன் கணவர் பெயரையும் முகவரியையும் கூறு. உன் பெற்றோரின் விலாசத்தையும் கொடு. அவர்களையெல்லாம் நேரில் பார்த்துப் பேசி உன் சார்பில் வாதாடுகிறேன். மீண்டும் உன் வாழ்வை வளமுள்ளதாக்குகிறேன். அஞ்சாதே அம்மா. தைரியமாயிரு."

* * *

"வாங்க. வாங்க. நலந்தானு? உடன் வந்திருக்கும் பெரியவர் யார்? அவருடன் இருக்கும் பையன் யார்?"

"அவர் எனக்கு மிகவும் வேண்டியவர். தங்கமான மனிதர். அவன், அவருடைய பிள்ளை. ஏழாவது வகுப்பில் படிக்கிறான். படிப்பில் மிகக் கெட்டிக்காரன். ஆனால்....."

"ஆனால் என்னங்க...?"

"பள்ளிக்கூடத்திற்கு மாதாமாதம் சம்பளம் கட்டமுடியவில்லை. புத்தகங்கள் வாங்கவும் இயலவில்லை. வறுமைதான் காரணம்."

"அவற்றிற்கெல்லாம் நான் ஏற்பாடு செய்கிறேன்.. கவலைப் படாதீர்கள். பெரியவரே, இன்னாரிடத்தில் சென்று இந்தக் கடிதத்தைத் தாருங்கள். பையனின் படிப்புச் செலவு முழுவதையும் அவர் ஏற்றுக்கொள்வார்."

* * *

செந்தமிழ்நாட்டின் தலைநகரமாம் சென்னையில் உள்ள தங்கசாலைத் தெருவைப் பலரும் அறிவர். அந்தத் தெருவில் 213-ம் எண் உள்ள ஓர் இனிய அழகிய இல்லம். அந்த இல்லத்தில்தான் மேலே குறிப்பிடப்பட்டிருப்பவை போன்ற உரையாடல்கள் அநேகமாக நாள்தோறும் நடைபெற்றபடி இருந்தன—சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாக.

அந்த அழகிய இல்லத்தின் தலைவியாரை நோக்கி நாள்தோறும் எண்ணற்ற இளைஞர்களும் முதியவர்களும் கன்னியரும் தாய்மாரும் மாணவர்களும் அலுவலாளரும் அணி அணியாக வந்தபடி இருப்பர். அவர்களில் சிலர் கல்லூரிகளில் இடம் தேடி வந்திருப்பர். வேறு சிலர், வாழ ஒரு வழி நாடி வந்திருப்பர். இன்னுஞ் சிலர், இருக்கும் பதவியைவிட உயர்ந்த பதவியைப் பெறுகின்ற வாய்ப்பைப் பயன் படுத்த வந்திருப்பர். மற்றும் சிலர், தம் பிள்ளைகளுக்குப் பள்ளிக் கட்டணம் செலுத்தவும் புத்தகங்கள் வாங்கவும் அருள் உள்ளம் படைத்த அன்பர்களின் உதவியைத் தேடிப் பெற வந்திருப்பர்.

வருவோர் அனைவரையும் முகம் கோணாமல் வரவேற்று, இனிய மொழிகள் புகன்று, தன்னால் இயன்ற உதவியைச் செய்து, அப்படிச் செய்வதால் அவர்களுக்கு ஏற்படும் புதுவாழ்வையும் புத்துணர்ச்சியையும் கண்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைந்து வந்தார் அந்த இல்லத் தலைவியார். பிறர் வாழ்வதற்காகவே தான் வாழ்ந்த அரும் பெருஞ் செல்வியாய்த் திகழ்ந்த அந்த அம்மையாரே 20—5—'59 அன்று பிற்பகல் இரண்டு மணி அளவில் இயற்கை எய்திய வீரத் தமிழன்னை டாக்டர் தாமாம்பாள் அவர்கள்.

செக்கச் செவேலென ஒளிவீசும் மேனி; அன்பு தவழும் முகம்; கருணை நிறைந்த பார்வை; குழந்தையின் மழலை போன்ற கள்ளங் கபடமற்ற பேச்சு; எல்லோரும் இன்புற்று இருக்க எண்ணும் உயர்ந்த உள்ளம்; அனைவரிடமும் இனிமையாகப் பழகும் அருமையான பண்பாடு—இப்படிப்பட்டவர்தான் டாக்டர் தர்மாம்பாள் அவர்கள்.

டாக்டர் அம்மையார் அவர்களைத் தன்னை அண்டினோரையெல்லாம் ஆதரித்து உதவிய அரும்பெரும் வள்ளல் என்று இயம்பினால் அது சிறிதும் மிகையாகாது. கொழு கொம்பின்றி வாடிய முல்லைக் கொடிக்குத் தன் விலையுயர்ந்த தேரை ஈந்த பாரி, குளிரினால் வாடிய

மயிலுக்குத் தன் பொன்னுடையைப் போர்த்திய பேகன், நெடுங்கால வாழ்வை அளிக்க வல்ல நெல்லிக் கனி ஒன்றை அவ்வை மூதாட்டிக்கு அளித்த அதிகமான் போன்ற வள்ளல்கள் பலர் பண்டைத் தமிழகத்தில் புகழொளி பரப்பி வாழ்ந்தனர். அது போலவே கல்விக் கோயில்கள் திக்கெட்டும் தோன்றுவதற்காகத் தங்களுடைய பெரும் பொருட் செல்வத்தை அள்ளி வீசிய டாக்டர் அழகப்ப, செட்டி நாட்டரசர் அண்ணாமலையார் போன்ற நல்லறச் செல்வர்கள் இக் காலத் தமிழகத்திலும் வாழ்ந்திருக்கின்றனர். ஆனால் அந்த அரும்பெரும் வள்ளல்களுக்கும் டாக்டர் அம்மையார் அவர்களுக்குமிடையே மாபெரும் வேறுபாடொன்று உண்டு. அந்த ஈகைச் செல்வர்களெல்லாம் அள்ளி அள்ளி வீசுவதற்கு இசைவாக, அவர்களிடம், உயர்ந்த உள்ளம் மட்டுமல்ல நிறைந்த செல்வமும் குவிந்து கிடந்தது. ஆனால் டாக்டர் தர்மாம்பாள் அவர்களிடத்திலோ ஏராளமான செல்வம் இருந்ததாக யாரும் இயம்பமுடியாது. சிலபல வேளைகளில் அவருடைய வாழ்க்கையை நன்கினிது நடத்துவதற்குத் தேவையான பணமில்லாமல் அம்மையார் அவர்களே கூட வாடியதுண்டு. ஆனால் அவர்களிடத்தில் “எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பது அல்லல் வேறு ஒன்றும் அறியேன்” என்று சான்றோர் தாயுமானவர் முன்னோர் காலத்தில் மொழிந்தாரே, அத்தகைய பண்பட்ட உள்ளம் இருந்தது. அந்த அரிய பண்பாடு காரணமாகச் செல்வமும் செல்வாக்கும் பட்டமும் பதவியும் பெற்றிருந்த எத்தனையோ பேர், அம்மையார் அவர்கள் ஒரு வார்த்தை கூறினால் போதும், அவர்கள் யார் யாருக்கு உதவியளிக்கும்படி தெரிவித்தார்களோ, அவர்களுக்கெல்லாம் உடனடியாக உதவிபுரிந்து வந்தார்கள். தன்னிடத்தில் பெருஞ் செல்வம் இல்லாமலிருந்தும், பிறருடைய செல்வத்தையும் செல்வாக்கையும் கொண்டு, ஆயிரக்கணக்கானவர்களுக்கு அற்புதமான அளவுக்கு உதவி புரிந்த ஒப்பற்ற பெருமை அம்மையார் அவர்களின் தனி உரிமை.

பிறருடைய துயரங்களைக் கண்டபோது குழந்தைபோல் கண்ணீர் பெருக்கி வருந்துகிற அளவுக்கு இளகிய இதயம் படைத்திருந்த அம்மையார் அவர்கள், தமிழ்மொழிக்கோ தமிழ் நாட்டுக்கோ கொடுமைகள் இழைக்கப்பட்ட நேரத்தில் சிங்க ஏறுபோல் சீறியெழுந்து, அஞ்சாத நெஞ்சத்துடன் போராட்டங்களைத் தொடங்கி, அசையாத உறுதியுடன் தன் கொள்கைகளை நிலைநாட்டியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட போராட்டக் காலங்களில் மலை குலைந்தாலும் மனம் குலையாமல் நிற்கும் மாவீரம் அம்மையார் அவர்களின் உள்ளத்தில் இயல்பாகவே அமைந்திருந்தது. 1938-ம் ஆண்டில், தமிழ்ப் பெரு மக்களின் விருப்பத்திற்கு மாறாக, இந்தி மொழியானது, கட்டாய பாடமாகத் தமிழ் மாணவர்கள் மீது திணிக்கப்பட்டபோது,

"எப்பக்கம் வந்து புகுந்துவிடும்—இந்தி, எத்தனைப் பட்டாளம் கூட்டி வரும்—அற்பமென்போம் அந்த இந்திதனை — அதன் ஆதிக்கம் தன்னைப் புதைத்திடுவோம்" என்று வீரமுழக்கமிட்டபடி அம்மையார் அவர்கள் போர்க்கோலம் பூண்ட காட்சியும், நூற்றுக்கணக்கான தாய்மார்களை அழைத்துக் கொண்டு, கட்டாய இந்தி என்றும் கொடுமையை வெட்டி வீழ்த்துவதற்காக அம்மையார் அவர்கள் வெஞ்சிறை வாழ்வை மேற்கொண்ட வீர வரலாறும், தமிழ் மக்களுடைய உள்ளத்தில் நீங்காத இடம்பெற்றுவிட்ட அழியாத ஓவியங்களாகும். தங்களைப் பெற்று வளர்க்கும் தாய் மொழியைப் பாதுகாப்பதற்காகப் பெண்கள் சிறைக்கோட்டம் சென்று அதனைத் தவக்கோட்டமாக்கிய இந்தக் காட்சி உலக வரலாற்றிலேயே அதற்கு முன் எப்போதும் இல்லாத ஒரு புதுமையாகும். உலக வரலாற்றின் ஏடுகளைப் புரட்டினால், பெண்களின் உரிமைக்காக—நாட்டின் அடிமைத் தளைகளை உடைத்து எறிவதற்காக—உள்ளே நுழைந்த வேற்று நாட்டவரை விரட்டியடித்து வெற்றிபெறுவதற்காக —இன்ன பிற நோக்கங்களுக்காகப் போராடிய பெண்கள் பலரைக் காண முடியும். ஆனால் தங்கள் தாய்மொழியின் பாதுகாப்புக்காகப் பெண்கள் உலகத்தைப் போர்க்களத்துக்கு அழைத்துவந்த பெருமையும் புகழும் டாக்டர் தர்மாம்பாள் அவர்களுக்கு மட்டுமே உண்டு.

அறிவுக்கும் காலத்துக்கும் பொருந்தாத சடங்கு—சம்பிரதாயம்—மூடப் பழக்க வழக்கங்கள் என்னும் கோட்டை கொத்தளங்களைப் பகுத்தறிவுக் குண்டுகளை வீசி இடித்துத் தகர்த்தெறிந்த வீர விமானியாகவும் திகழ்ந்தவர்கள் டாக்டர் அவர்கள். கோயில்களில் பெண்களைப் பொட்டுக்கட்டும் பொல்லாங்கான வழக்கத்தைப் பொடிப் பொடியாக்க அம்மையார் அவர்கள் ஆற்றிய பணி நாடறிந்த ஒன்று. சாதி பேதம் என்னும் சழக்குதனை அழித்து ஒழிப்பதற்குரிய ஒரே மருந்து கலப்பு மணம் என்பதை நன்கறிந்து எத்தனையோ கலப்புத் திருமணங்களை அம்மையார் அவர்கள் முன்னின்று நடத்திவைத்திருக்கிறார்கள். அதுபோலவே கணவனை இழந்த இளம் பெண்கள், தம் வாழ்நாள் முழுவதும், இழந்த இன்பத்தை எண்ணி எண்ணி ஏங்கித் துடிக்கவேண்டுமே தவிர புதிய பூந்தோட்டத்தில் புகுதல் ஆகாது என்னும் பாழான எண்ணத்தை ஒதுக்கித் தள்ளிவிட்டு, எண்ணற்ற கைம்பெண்களுக்கு மறுமணம் செய்துவைத்த புரட்சி உள்ளம், அம்மையாருடைய அன்பு உள்ளம்.

தமிழ்மொழியின் வளர்ச்சியில் அவர்களுக்கு இருந்த தளராத பற்றும், எப்போதும் படித்துக்கொண்டே இருப்பதில் அவர்களுக்கு இருந்த அளவற்ற ஆர்வமும், பெண்கல்வியின் வளர்ச்சிக்காக அவர்கள் ஆற்றியுள்ள தொண்டும், தமிழ் இசை இயக்கத்தின் சிறப்புக்காக

வும் செழிப்புக்காகவும் அன்னார் புரிந்துள்ள அரும்பணியும் எண்ணி யெண்ணி மகிழத்தக்க ஏற்றமும் எழிலும் மிகுந்தன என்பதை யார் மறுக்க முடியும்?

ஜஸ்டிஸ் கட்சி—பிரம்ம சமாஜம்—திராவிடர் கழகம்—திராவிட முன்னேற்றக் கழகம்—மாணவர் மன்றம்—நக்கீரர் கழகம்—மகளிர் மன்றம் முதலிய பல்வேறு அமைப்புகளிலும் அம்மையார் அவர்கள் ஈடுபட்டு, பண்பும் பயனும் மிக்க வகையில், சீரும் சிறப்பும் செறிந்த முறையில் நற்பணி நிகழ்த்தியுள்ளார்கள். சிறப்பாகவும் குறிப்பாக வும் திராவிட முன்னேற்றக் கழகத்தையும், மாணவர் மன்றத்தையும், அம்மையார் அவர்கள், தன்னுடைய இரண்டு கண்களாக எண்ணி, அவற்றின் உயர்வுக்காகவும் வளர்ச்சிக்காகவும் அல்லும் பகலும் அரும்பாடுபட்டு வந்தார்கள்.

தஞ்சைமாநகரை அடுத்த கருந்தட்டாங்குடி என்னும் சிற்றூரில் 1890—ஆம் ஆண்டு புரட்டாசித் திங்களில் பிறந்த அம்மையார் அவர் கள், தன்னுடைய 69ம் வயதில், 20-5-59 அன்று சென்னை நகரில் உயிர் நீத்தார்கள்.

விழுமிய பண்புகள் கெழுமிய அன்னையாய்—தனக்கென வாழாத பிறர்க்குரியாளராய்—முத்தமிழின் பாதுகாப்புக்காக மொழிப்போர் புரிந்த மாதரசியாய்—தமிழகம் பெற்ற பெறற்கரிய கருவூலமாய்த் திகழ்ந்த தமிழ்ச் செல்வம் — தென்னகத்தின் பொன்னொளி — மாதர் குல மணிவிளக்கு டாக்டர் தர்மாம்பாள் அவர்களின் உடல் மறைந்து விட்டது. உண்மைதான்—ஆனால் அவர்களுடைய அந்த உருவம் — அது தமிழர்தம் உள்ளத்தை விட்டு என்றென்றும் மறையாது, **தமிழ் மொழி வாழும் வரையில்—தமிழ்நாடு இருக்கும் வரை யில்—டாக்டர் தர்மாம்பாள் அவர்களின் உருவமும் பெயரும் பொலிவுடன் திகழும் என்பதில் துளியும் ஐயமில்லை.**

சென்னை நகரத்தின் புதிய மேயர்

சென்னை மாநகரத்தின் புதிய மேயராகத் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தோழர் அ. போ. அரசு அவர்கள் தேர்ந்தெடுக் கப்பட்டிருப்பது நாடறிந்த நற் செய்தியாகும். அடக்கவுணர்ச்சியை யும் பொறுமைப் பண்பையும் தன்னுடைய அணிகலன்களாகக் கொண்டிருக்கும் அன்பர் அரசு அவர்கள், அறிவாற்றல் மிக்கவர்; நகராட்சி நிர்வாகத்தில் முதிர்ந்த அனுபவம் உடையவர்; ஏழை எளிய மக்களோடு நெருங்கிப் பழகி, அவர்களுடைய தேவைகளையும் துயரங்களையும், அவர்களுடைய வாழ்க்கையை வதைத்து வேதனையை அளிக்கும் வறுமைக் கொடுமையையும் நன்றாக அறிந்தவர்; அர்த்த

மற்ற சடங்குகளையும் அவசியமற்ற சம்பிரதாயங்களையும் துணிச்சல் மிக்க முறையில் ஒதுக்கித்தள்ளும் பகுத்தறிவுப் போர் வீரர்; ஆரம்பக் கல்வியின் முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படை என்னும் உண்மையை மிக நன்றாக அறிந்த காரணத்தால் பத்தாண்டுகளுக்கு முன்னரே ஏழைப் பிள்ளைகளுக்காகச் சென்னை சிந்தாதரிப் பேட்டையில் இரவுப் பள்ளி ஒன்றைத் தொடங்கி நடத்தியவர்.

இத்தகைய பண்பும் சிறப்பும் மிகுந்த இளைஞரேறு மேயர் பதவியில் அமர்ந்தது பெருமகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சி என்பதை யாரே மறுத்தல் இயலும்?

புதிய மேயர் அரசு அவர்களே, வருக வருக! தங்களுடைய அரசு நல்லரசாகத் திகழ்க பொலிக என வாழ்த்துகிறோம்.

கல்வித் துறையிலும் அரசினரின் ஆதிக்கம் அதிகமாவதா?

"சுதேசமித்திரன்" கண்டனம்

சமுதாய நலம் பற்றிய எந்தத் துறையிலுமே ஏகபோக பாத்தியதை அனர்த்தகரமானது. இது தனியார் துறையைப் போல் சர்க்கார் துறைக்கும் பொருந்தும். தொழில்களில் போட்டி இருந்தால் பண்டங்களின் தரத்தை உயர்த்தவும், விலையை வர வர மலிவாக்கவும் ஊக்கமிருக்கும். அவை ஏகபோகமாயிருந்தால், உற்பத்தியைக் குறைத்து, தரத்தையும் மட்டுப்படுத்தி விலையை மட்டும் தாராளமாக உயர்த்தவே தூண்டுதல் ஏற்படும் என்பது நாம் அனுபவபூர்வமாகக் கண்ட உண்மை. மற்ற எந்த இனத்திலும் ஏகபோகத்தால் விளையும் தீமையைவிட கல்வித் துறையில் எத்தரப்புக்கும் அத்தகைய ஏகபோகம் ஏற்பட விடுவது இன்னும் தீங்கானது. உண்மையில் அது ஜனநாயகத்திற்கே குழி பறித்துவிடும் என்பதை மத்தியக் கல்வி மந்திரி டாக்டர் ஸ்ரீமாலி எடுத்துக் காட்டியுள்ளார்.

கற்றது கையளவு, கல்லாதது உலகளவு என்பது வெறும் சொல் அலங்காரமல்ல. கல்வித் துறையில் இன்னும் எவ்வளவோ விதமான அபிவிருத்திகளுக்கு இடமிருக்கிறது. புதிய புதிய முறைகளைப் பரீட்சித்துப் பார்ப்பதன் மூலம்தான் நாம் இத்துறையில் உருவான

முன்னேற்றம் காண முடியும். சர்வாதிகார நாடுகளில் கல்வியின் எல்லா அம்சங்களையும் அதிகாரிகள் தம் பிடிப்பில் வைத்துக்கொண்டிருக்கின்றனரென்றால், அது முற்றிலும் பொருத்தமே. ஏனெனில் தங்கள் கோட்பாட்டுக்கொத்தவாறே மக்களது சித்தம் இயங்கச் செய்வது அவர்கள் குறி. ஆனால் ஜனநாயகத்தில் அபிப்பிராய சுதந்திரம் தான் அடிப்படையானது. அதற்கு முட்டுக்கட்டை போடக்கூடிய ஏகபோக பாத்தியதை எதையும் முக்கியமாக கல்வித் துறையில் நாம் சகிக்க முடியாது. இதில் சர்க்காருக்கு அத்தகைய பாத்தியதை அளித்தால் கல்வித் துறையில் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்ட புதிய பரீட்சை எதையும் தனியார் செய்து பார்க்க இடமில்லாமல் போய்விடும். உண்மையில் அத்தகைய பரீட்சைகளை மேற்கொள்ளும் தனிப்பட்ட ஸ்தாபனங்களுக்குத் தாராளமாகக் கிராண்டுகள் கொடுப்பது சர்க்கார் கடமை என்று யூனியன் கல்வி மந்திரி வலியுறுத்தியுள்ளார்.

தற்போதைய கல்வியின் தரத்தைப்பற்றி நாம் விசேஷமாகப் பெருமை கொள்வதற்கில்லை. இதில் செலவாகும் பணத்திலும், உழைப்பிலும் ஒரு பெரும் பகுதி வியர்த்தமாகிவிடுகிறது என்பதை அம்மந்திரியே ஒப்புக்கொண்டுள்ளார். கல்வித் தரத்தை உயர்த்துவதற்கான பரீட்சைகளை யார் நடத்துவது? கண்டிப்பான சட்டதிட்டங்களுக்குட்பட்ட சர்க்கார் பள்ளிகளில் நெளிவு சுளிவுகளுடன் கூடிய புதிய பரீட்சைகள் நடத்த அதிக வாய்ப்பு இராது. அத்தகைய பரீட்சைகள் தனியார் நிர்வாகத்திலுள்ள ஸ்தாபனங்களிலேயே சிறக்க நடக்கக்கூடும். ஆனால் சென்னை சர்க்கார் ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் விஷயத்தில் இப்போது அமுலுக்குக் கொண்டு வந்துள்ள திட்டம் தனியார் நிர்வாகத்திலுள்ள பள்ளிக்கூடங்களின் வாழ்வுக்கு உலை வைக்கக்கூடியது. அத்தகைய பள்ளிக்கூடங்களில் மாணவர்களிடமிருந்து கட்டணம் வாங்குவதாயிருந்தால், அவைகளுக்கு கிராண்டு கிடைக்காது என்று சர்க்கார் விதித்திருப்பதன் விளைவு அதுதான். இந்நிலையில் கல்வித் துறையில் புதிய பரீட்சைகளுக்கு இடமில்லாமல் போவதுடன் அதன் பலனாக கல்வி முழுதும் ஒரே மட்டத்திற்கு அதிலும் தற்போதுள்ளதை விட, மிகத் தாழ்வான மட்டத்திற்கு வந்துவிடும். அதோடு கல்வி பற்றிய பொறுப்பு - அதிகாரம் - இரண்டும் சர்க்காரின் ஏகபோகமாகிவிடும்;

—" சுதேசமித்திரன் "1-6-59 தலையங்கம்.

நெல்லை மாவட்டத் துணைவழித் தொடக்கப் பள்ளி நிர்வாகிகள் சங்கம்

—]***[—

14—5—59 அன்று, இச் சங்கத்தின், கூட்டம் இச் சங்கத் தலைவர் திரு. சாம் மாசிலாமணி அவர்கள் தலைமையில் கூடியபோது கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, ஆட்சியாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன :—

1. துணை வழித் தொடக்கப் பள்ளிகள் கட்டணம் வசூலிக்கும் பள்ளிகளாக இருப்பதா அல்லது வசூலிக்காத பள்ளிகளாக இருப்பதா என்பது பற்றிய உத்தரவை 1960 61-ம் ஆண்டுக்கு ஒத்திவைக்க வேண்டுமென்று சென்னை அரசாங்கத்தை இந்தக் கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

2. அரசாங்கத்தாரே துணைவழித் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு நேரிடையாக ஊதியம் அளிப்பது என்கிற ஏற்பாட்டால் பள்ளிக்கூடங்களின் திறமையும் கட்டுப்பாடும் சீர் குலைந்துவிடும் ஆதலாலும், ஆசிரியர்களுக்கும் நிர்வாகிகளுக்குமிடையே உள்ள நல்லுறவு கெட்டுவிடும் ஆதலாலும், அரசாங்கத்திற்கும் ஆசிரியர்களுக்கும் வீண் பணச்செலவே ஏற்படும் ஆதலாலும், அந்த ஏற்பாட்டைக் கைவிட்டு, எப்போதும்போல நிர்வாகிகள் மூலமே ஆசிரியர்களின் ஊதியத்தை அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்தக் கூட்டம் அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறது.

எம். ஏ. சதானந்த சுந்தரம்,

செயலாளர்,

நெல்லை மாவட்டத் துணைவழித்
தொடக்கப் பள்ளி நிர்வாகிகள் சங்கம்.

அறிவுக் கதிர்

வீரத்துக்கு மூலம், ஈரம்; கோபமன்று; வன்மமன்று. ஈரத்தினின்றும் எழுவதே வீரம். கோபத்தினின்றும் வன்மத்தினின்றும் எழுவது வீரமாகாது - அது வெறி.

—திரு. வி. க.

ஆள்வதற்கே பிறந்தவர்கள் உலகத்தில் எவரும் கிடையாது. ஆள்பவர்கள் எவராயினும், ஆளப்படுபவர்களிடமிருந்து, ஆள்வதற்கான அனுமதியைப் பெற்றே ஆகவேண்டும். பெற்றால்தான் ஆட்சி செல்லுபடியாகும்.

—வில்லியம் ஹாரிசன்

மருது பாண்டியர்

தாமரைக் கண்ணன்

காட்சி 29

காளையார் கோவில் காட்டு அரண்

(மருது சகோதரர்கள், ஊமைத்துரை, துரைசாமி முதலியோருடன் விடுதலை வீரர்கள்)

துரைசாமி :—நரியும் புலியும் ஒன்றாகக்கூடி நன்றியில்லா நாய்க்கு முடி சூட்டியதாம். காகமும் கழுகும் கூட்டம் போட்டு வாழ்த்து இதழ் வாசித்துக் கொடுத்ததாம்.

பெ.மருது :— எவ்வளவு துணிச்சல்? சிவகெங்கைச் சீமையின் வரலாறு தெரியுமா இந்தத் துரோகிகளுக்கு. மாத்தூர் நவாபுவால் ஏலத்திற்குக் கொண்டுவரப்பட்ட இந்த ஜமீனை நான் என் சொந்தப் பணம் போட்டு மீட்டு அநுபவித்து வருகிறேன். அது தெரியாமல் வேலு நாச்சியை நாங்கள் ஏமாற்றி விட்டோம் என்றானும் அந்த எத்தன், புதுக்கோட்டையான். தேவஸ்தானம், சேறுதட்டு, உப்பளம், சத்திரம், சாயவேல், சுங்கம், ஆயம், மடம் முதலியவைகளை நானே கிரயத்துக்கு வாங்கினேன். மீதியிருந்த சிவகெங்கை, காளையார் கோவில் போன்ற சில இடங்களை வேலு நாச்சி இறக்கும்போது எங்களிடம் ஒப்படைத்தாள். நன்றி கெட்டவர்கள் ஒன்றாகக்கூடி எவ்வளவு நாசுக்காகக் கயிறு திரித்து விடுகிறார்கள்.

ஊமைத்துரை :—ஆயிரம் சொல்லிக் கொள்ளட்டும்; மறவர்கள் ஏமாந்துவிட மாட்டார்கள்.

சி.மருது :—இல்லை, துரை! நாம் இனிமேல்தான் விழிப்பாக இருக்க வேண்டும். மறவர்களிடையே இருக்கும் ஒற்றுமையைக் கண்டு இப்போது பிரித்தாளும் சூழ்ச்சியில் இறங்கி இருக்கிறார்கள். நாம் சர்வ ஜாக்கிரதையாக இருந்தால்தான் வெற்றி காண முடியும். என்ன இருந்தாலும், படமாத்தூரான் 'பொம்மை ராஜா' ஆனாலும், 'புதிய ராஜா......புதிய ராஜா' என்று அவர்கள் கூறி மக்களின் மனதைத் தம் பக்கம் இழுத்துக் கொள்ளலாம், அல்லவா?

ஊமைத்துரை :—அவர்கள் முந்திக் கொள்வதற்கு முன்பாக நாம் ஒன்று செய்வோம். இப்போதே விடுதலை வீரர்களுடன் 'பிரான்மலை'க்குச் சென்று அங்கிருந்து சிங்கம் பிடாரியைத் தாக்குவோம்.

பெ.மருது :—ஆம். சோழவரத்தில் சோம்பிக்கிடக்கும் பறங்கிப் படை சுறுசுறுப்புப் பெறுவதற்குள் நாம் இழந்துவிட்ட ஊர்களைப் பிடிப்பதற்குச் சரியான வழி அது. அனைவரும் பிரான் மலைக்குப் புறப்படுங்கள். அங்குள்ள பெரிய பெரிய பாறைகளும், குகைகளும் விடுதலை வீரர்கள் தங்கிப் போரிடுவதற்கு ஏற்ப வசதியாக இருக்கும்.

—திரை—

காட்சி 30

புதுக்கோட்டை

கறுத்தான் இல்லம்

(கண்ணம்மா பாத்திரம் தேய்த்துக் கொண்டிருக்கிறாள். கறுத்தான் குடித்துக் கொண்டே கையில் மதுக் கலயத்துடன் வருகிறான்.)

கறுத்தான் :—(நா குழறி) கண்ணம்மா! கண்ணம்மா...! என்ன பண்றே...?

கண்ணம்மா :—பானையும் சட்டியும்......ம்ஹூ......க்கும்......

கறுத்தான் :—பண்ணுவே......பண்ணுவே......

(பக்கத்தில் சட்டியை வைத்துவிட்டு அருகேயிருக்கும் கல்லின்மீது உட்காருகிறான்.)

கறுத்தான் :—ஓஹோ......பாத்திரம் தேய்க்கிறயா......

கண்ணம்மா :—ஆமா(ம்)! ரொம்ப நாளா கவனமில்லாம விட்டுட்டேன்: அதிக அழுக்கு சேர்ந்து போச்சு. தேய்ச்சு தேய்ச்சு பார்க்கிறேன், அழுக்கே போகலே...கறுத்து கிடக்குது உன் மனசு போல......

கறுத்தான் :—வாட்......வாட்......என்ன கோவமா பேசறே. போயண்டி! நான் உங்கிட்ட ஒரு முக்கியமான விஷயம்

சொல்லணுமுன்னு வந்தேன். நீ என்னவோ முடுக்கிகிட்டு நிக்கறியே .....

கண்ணம்மா :—சொல்லித் தொலே......

கறுத்தான் :—அதிர்ஷ்டம் நம்மைத் தேடி வருதடி. இனிமே ஆளுகளே பிடிக்க வேண்டியதுதான் பாக்கி. அப்புறம் நூறு வேலி நிலம் என் உள்ளங்கையிலே இருக்கிறுப் போலதான்.

கண்ணம்மா :—(எழுந்து கவனமுடன்) நீ என்ன சொல்றே...

கறுத்தான் :—இன்றும் புரியலியா? அதுதான் அந்த மருதப்பயக ஆட்டம் முடிஞ்சு போச்சு.

கண்ணம்மா :—ஆ...!

கறுத்தான் :—அலறுதடி! ஊமைத்துரையும் அவனுகளும் பதுங்கியிருந்த பிரான்மலையை புடிச்சுட்டோம்.

கண்ணம்மா :—அடப் பாவிங்களா...நீங்க பாழாய்ப் போக...

கறுத்தான் :—(தன் பேச்சிலேயே கவனமாக) மறுபடியும் காளேயார் கோவிலுக்கே ஓடிட்டானுக.

கண்ணம்மா :—நீங்க விளங்குவீங்களா...? விருத்திக்கு வருவீங்களா...?

கறுத்தான் :—வாட்...வாட்...! நீ எங்களே ஆதரிப்பேன்னு பார்த்தா......

கண்ணம்மா :—ஆதரிக்க மாட்டேன். அக்கிரமம் செய்யற உங்களே ஆதரிக்கவே மாட்டேன்.

கறுத்தான் :—அப்பொ...எங்களே 'அட்டாக்' பண்றே. அப்படி தானேடி...?

கண்ணம்மா :—அது என்னவோ...அந்த எழவு எடுத்த பேச்சு எனக்குத் தெரியாது. இந்தா பாரு...நீ குடி போதையில் இருக்கிறதாலே தெளிவா சொல்றேன். நீ பதுங்கிப் பதுங்கி அந்த பறங்கிக்காரனுக கூட சேர்ந்து பகல் கூத்து ஆடிட்டே வர்றே...நான் மருதய்யங்களுடைய விடுதலேப் பட்டாளத்திலே சேர்ந்து வெளிப்படையாகவே உங்களுக்கு எதிரா சண்டை போடப் போறேன்.

கறுத்தான் :—வாட்...வாட்...?

கண்ணம்மா :—வெள்ளைக் காரனுகளை ஒழிக்கறதுக்கு முன்னே உன்னைப் போல, மானங்கெட்டு கெடக்கும் இனத்துரோகிகளை முதல்ல ஒழிக்கணும்...

கறுத்தான் :—ஆகா...நீ தாண்டி உத்தமி...பதி சொல் தாண்டாத பத்தினி...

கண்ணம்மா :—எப்படிப்பட்ட கணவனுக இருந்தாலும் எந்தத் தமிழச்சியும் எதிர்த்துப் பேசமாட்டா(ள்). இப்பகூட நீ என்னை பொய் சொல்லச் சொல்லு. கட்டின புருசனுச்சே என்று உன் பேச்சுக்கு மதிப்பு கொடுத்து பொய் சொல்றேன். திருடச் சொல்லு...உனக்காக திருடறேன்! கொலை செய்யச் சொல்லு ...கொலை செய்யறேன். 'சாவுடின்னு' சொல்லு. சந்தோஷத் தோட செத்து காட்டறேன்.

கறுத்தான் :—அதெல்லாமா நான் சொன்னேன். (அன்புடன் கடிந்து) நீ பேசாம இருடின்னா இருக்க மாட்டேங்கறயே...

கண்ணம்மா :—இருக்க மாட்டேன். இந்த ஒரு விஷயத்திலே மட்டும் சும்மா இருக்கவே மாட்டேன். நம்ம சீமையிலே பொறந்தவங்களுக்கு எதிரா நாடோடி கூட்டத்தோட நான் சேரவும் மாட்டேன்; நீ சேர்ந்திருப்பதை நான் ஒத்துக்கிடவும் மாட்டேன்.

கறுத்தான் :—எலே, நிறுத்து! உன் மனசு எனக்கு நல்லா புரிஞ்சு போச்சு...இனிமே பேசாதே...பேசினே உன்னைக் கொன்னுடு வேன்.

கண்ணம்மா :—இப்பவே கொன்னுடு. எனக்கு கவலையில்லை. பணத் துக்காக சொந்த இனத்தானையே காட்டிக் கொடுக்கற ஈனப் பொழைப்பைவிட, பொறந்த மண்ணுக்காக உசிரை விடறது அப்படி ஒண்ணும் கெட்டுப் போனதில்லை.

கறுத்தான் :—(கோபமாக) கண்ணம்மா...!

கண்ணம்மா :—நீ கத்தறதிலே பிரயோசனமில்லை. உம்மேல் வைச் சிருந்த மட்டு மருவாதையெல்லாம், நீ மூத்தைய(ன்) அண்ணனைக் குத்திப் போட்டு, படமாத்துரானை பட்டத்தரசனுக்கப் பாடு பட்டாயே அப்பவே போயிருச்சி...

கறுத்தான் :—வாட்...வாட்...மட்டு மருவாதையும் போயிடுச்சு...

(மதுக் கலயத்தை அவள் தலைமீது போட்டு உடைக்கிறான். ஈட்டியால் அவளை

ஓங்கி அடிப்பதற்குள், அவள் அருகில் கிடந்த கம்பை எடுத்துத் தடுத்துக் கொள் கிருள். மீண்டும் அவன் அடிப்பதற்குள் அந்தக் கம்பால் தட்டி, ஈட்டியைப் பிடுங்கிக் கொள்கிருள்.)

கறுத்தான் :—(கூச்சலிட்டு) கண்ணம்மா! போடி வெளியே. ம். ஓடிப்போ......இனிமே இந்த வீட்டிலே காலெயெடுத்து வைக்காதே!

கண்ணம்மா :—(ஈட்டியை எடுத்துக் கொண்டு) தாராளமா போறேன். கல்யாணம் ஆனதிலே யிருந்து! கண்ணம்மா... கண்ணம்மா'ன்று அன்பா கூப்பிடுவே. இந்தக் கணத்தோட என் ஆசை மச்சான் செத்துப் போயிட்டான்...உன் கண்ணம் மாவும் செத்துப் போயிட்டா...ஒன்று மட்டும் கடைசியா சொல்லிட்டுப் போறேன். இந்த மானமுள்ள கண்ணம்மாவை யாராலும் கொல்லமுடியாது. உன்னைப்போல தாய்நாட்டுக்குத் துரோகிகள் ஒருத்தர் இரண்டு பேரையாவது கொன்னுட்டு தான் நான் சாவேன். நான் சாவறதுக்குள்ளே மருது ராசா வுக்கு என்னல் முடிஞ்ச உதவியை செஞ்சுட்டுதான் சாவேன்.

(ஈட்டியுடன் போகிருள். கறுத்தானின் மனம் குழம்புகிறது.)

கறுத்தான் : (கலக்கத்துடன்) கண்ணம்மா...கண்ணம்மா! திரும் பிக்கூட பார்க்காம போருளே. அடிப்பாவி! உம்மேல என் உசிரையே வச்சிருந்தேனே.

(அவள் சென்ற திசையைப் பார்த்த வாறே, தலைமீது கை வைத்த வண்ணம் சோர்வுடன், கல்லின்மீது அமர்ந்து கலங்கு கிருன்.)

—திரை—

காட்சி 31

காளையார் கோவில்—காடு.

(குறுணி, குண்டன் என்ற இரு சிறுவர் களும் காணமற்போன தங்கள் ஆட்டைத் தேடிக்கொண்டு வருகின்றனர்.)

குறுணி :—ஏலே, குண்டா...!

குண்டன் :—ஏண்டா...

குறுணி :—கால் வலிக்குது...என்னால் நடக்கவே முடியலேடா... இந்த நொண்டி ஆடு எங்கே போயிருக்கும்...

குண்டன் :—எங்கே போயிருக்கும்னு தெரிஞ்சா ஏண்டா அலையப் போறோம். நேராகப் போய் ஓட்டி வரலாமே...

குறுணி :—அது சரி'லே! வயிற்றுக்கு நிறைய தீனியும் தழையும் இருந்தாகூட, இந்த ஆடு ஏண்டா இப்படி அலைஞ்சு அலைஞ்சு ஓடுது.

குண்டன் :—இது தெரியாதா, உனக்கு? பட்டினியா யிருக்கிறவன் பேசாம மூலையிலே முடங்கிக் கிடக்கிறான்; கையிலே பணமும் காசுமா இருப்பு வச்சிருக்கிறவன்தான், 'இன்னும் நாலுபேரு அகப்படமாட்டாரா...அவனுக வாயிலும் வயித்திலும் அடிச்சு நம்ப தொப்பையையும் தொந்தியையும் ரொப்பிக்க மாட்டோமா'ன்னு சுத்தி சுத்தி அலையறான். (சுற்று முற்றும் பார்த்துவிட்டு) அந்த புதுக்கோட்டை மவராசாவுக்கும் எட்டய புரத்து ராசாவுக்கும் என்னடா இல்லை...அம்பது தலைமுறைக்கு உக்காந்து சாப்பிட்டாகூட அழியாது...அவ்வளவு செல்வம் இருந்தும் சும்மா இருக்காங்களா......பறங்கிக்காரனுககூட சேர்ந்துகிட்டு, அக்கம் பக்கத்து ராசாவை யெல்லாம் விழுங்கி ஏப்பம்விடப் பார்க்கிறாங்களே, எதுக்கு...? எல்லாம் பேராசை யடா பேராசை.

குறுணி :—உஸ்...யாரோ ஒரு தாய் வர்றாங்க. சும்மா இருடா... நமக்கு ஏ(ன்) வம்பும் தும்பும்......

(கையில் சட்டியுடன் கண்ணம்மா வருகிறாள்.)

குண்டன் :—என்னங்க, ஆச்சி! இந்தப் பக்கம் ஒரு வெள்ளாடு போச்சிங்களா?

கண்ணம்மா :—இல்லை, தம்பி!

குறுணி :—கால்கூட கொஞ்சம் தாங்கி தாங்கி நடக்குமுங்க...

கண்ணம்மா :—நான் பார்க்கலேயப்பா......

(சோர்வுடன் மரத்தடியில் அமர்கிறாள். சிறுவர்கள் ஒரு ஓரத்தில் மெல்லிய குரலில் தென் பாங்கு பாடிக்கொண்டிருக்கின்றனர்.

முத்தய்யன் மார்பில் கட்டப்பட்டுள்ள பெரிய கட்டுடன் தள்ளாடியவாறே வருகிறான்.)

கண்ணம்மா :—(பதற்றத்துடன்) ஆ! முத்த'ண்ணா! முத்த'ண்ணா...!

முத்தய்யன் :—(மெல்ல) யாரு...கண்ணம்மாவா... நீ எங்கேம்மா வந்தே...?

கண்ணம்மா :—அது பெரிய கதை; உங்க உடம்புக்கு எப்படி யண்ணா இருக்கு...?

முத்தய்யன் :—(அயர்ந்து) வலி தாங்கமுடியலே'ம்மா... மூச்சுவிட முடிய'லே. நீ எனக்கு ஒரு உதவி செய்யறியா?

கண்ணம்மா :—என்ன'ண்ணா?

முத்தய்யன் :—மருதய்யங்க காளையார் கோவிலில் இருக்கிறாங்களாம். பறங்கிப் படை நாளைக்கு அவுங்கமேலே படையெடுக்கப் போவுதாம். சாக்கிரதையாயிருக்கச் சொல்லணும் அவுகளை...ம்...என்னைப்பற்றி ஒன்றும் சொல்லாதேம்மா... சொன்னால், எனக்காக வருத்தப்படுவாக! ராசாவையும் நம்ம பட்டாளத்தையும் ரொம்ப கவனமா இருக்கச் சொல்லு. அதுவே போதும்...!

கண்ணம்மா :—அதுவரை நீ எங்கே யண்ணா, இருப்பாய்?

முத்தய்யன் :—நான் எப்படியாவது இருந்துக்குவேன். நீ சேதியை சீக்கிரமா எட்ட வை. குறுக்கு வழியா, சுடலைக் கொடியைத் தாண்டி காட்டுப் புளியந்தோப்பு வழியா போ. சீக்கிரம் போயிடலாம்...விரைவா ஓடு...!

கண்ணம்மா :—(குண்டனிடம்) தம்பி! இவரை சாக்கிரதையா பாத்துக்கோ.

குண்டன் :—சரி, ஆச்சி!

கண்ணம்மா :—நான் பொழுது சாயறதுக்குள்ளே வந்துடறேன்!

(ஓடுகிறாள். தனிமையில்........)

குண்டன் :—ஏலே, குறுணி...!

குறுணி :—என்னடா......

குண்டன் :—இந்த அண்ணாச்சி, நம்ம மருது ராசாவுடைய ஆளு போல இருக்குது. இவரை நம்ம குடிசைக்கு அழைச்சுப் போகலாமா...?

குறுணி :—ஓ! அவரை கூப்பிட்டுப் பாரு. வந்தா கூட்டிகிட்டுப் போகலாம்.

குண்டன் :—(முத்தய்யனிடம் சென்று) என்னங்க, அய்யா! எங்க குடிசை இந்தா பக்கத்திலே ஒரு நாழி வழியிலே இருக்கு... மெள்ள மெள்ள வர்றீங்களா?

முத்தய்யன் :—என்னால் நடக்கமுடியாதே, தம்பி!

குறுணி :—எங்க தோள்பட்டையை புடிச்சிகிட்டு மெதுவா வாஙக... கூப்பிடு தூரந்தான்... அங்கே போய் கூழோ தண்ணியோ குடிச்சா கொஞ்சம் தெம்பு வரும்.

குண்டன் :—மாலை மங்கறதுக்குள்ளற, அந்த ஆச்சியைக் கண்டு பிடிச்சு உங்களண்டை கொண்டு வந்து விடறோம்...

முத்தய்யன் :—சரி, தம்பி!

(மெல்ல எழுந்து அவர்களுடைய தோளைப் பற்றிக் கொண்டு செல்கிறான்.)

—திரை—

காட்சி 32

பிரான் மலை—போர் முகாம்.

(தொண்டைமான், பிளாக்பர்ன், படமாத் தூர் தேவர், முதலானோருடன் கர்னல் அக்நியு.)

அக்நியு :—மிஸ்டர் புதுக்கோட்டை....!

தொண்டை :—என்ன சார்...

அக்நியு :—சென்னப் பட்டிணத்திலிருந்து கவர்னர் கிளைவ் லெட்டர் எழுதி யிருக்கிறார், அய்யா......

தொண்டை :—என்னைப் பற்றி ஏதாவது......

அக்நியு :—படமாத்தூர் தேவர் அரசராவதற்கு நீர் செய்த உதவிகளுக்காக நன்றி தெரிவித்து இருக்கிறார். மருது பாண்டியனை ஒழிக்கும் போரில், நீர் செய்யும் மகத்தான உதவிகளைக் பாராட்டிப் பக்கம் பக்கமாகப் புகழ்ந்து இருக்கிறார்.

பிளாக்பர்ன் :—கவர்னர்பிரான் கிளைவ் அவர்களே பாராட்டியிருக்கிறார். இப்படிப்பட்ட பாக்கியம் யாருக்கும் அவ்வளவு சுலபத்தில் கிடைப்பதில்லை.

தொண்டை :—எல்லாம் தங்களைப் போன்ற துரைமார்களுடைய தயவு... இன்னும் என்னால் செய்யமுடிந்ததையெல்லாம் செய்யறேனுங்க.

அக்ரியு :—...ம்...காளையார் கோவிலுக்குச் செல்லும் குறுக்கு வழியைத் தெரிந்து கொண்டால் போதும்; நாளையே வெற்றி நம்முடையதுதான்.

பிளாக்பர்ன் :—மிஸ்டர், புதுக்கோட்டை! அந்தக் குறுக்கு வழியைக் கூறுபவருக்குக் கொள்ளை கொள்ளையாகப் பணம் கொடுக்கப்படும் என்று பொது மக்களுக்கு அறிவியுங்கள்.

தொண்டை :—இப்போதே ஆவன செய்கிறேன்.

(தேவரும் தொண்டைமானும் போகின்றனர்.)

அக்ரியு :—நீர் கை தேர்ந்தவர், மிஸ்டர் பிளாக்பர்ன்! புதுக்கோட்டையானை எப்படி யெல்லாம் வளையக் கட்டி வைத்திருக்கிறீர்.

பிளாக்பர்ன் :—கவர்னர் பெருமான் என்னை சென்னப் பட்டணத்திலிருந்து அனுப்பியதே அதற்காகத்தானே......

அக்ரியு :—நீர் 'போடு தோப்புக்கரணம்' என்பதற்குள், 'எண்ணிக் கொள்ளுங்கள்... எத்தனை வேண்டும்' என்று போட ஆரம்பித்து விடுகிறான். 'ஆடு' என்பதற்குள் ஆடித்தீர்த்து விடுகிறான்.

பிளாக்பர்ன் :—பைத்தியக்காரன்!

(இருவரும் சிரிக்கின்றனர்.)

—திரை—

காட்சி 33

காளையார் கோவில் காடு.

(கண்ணம்மா கல்லிலும் முள்ளிலும் நடந்து வருகிறாள். எதிர்ப்புறத்திலிருந்து 'முகம்மது கலீல்' என்பவன் வருகிறான். மூட்டை முடிச்சுக்களுடன் தற்செயலாக

(அந்த வழி வந்த முனியம்மா, அவர்கள் இருவர் பேசுவதையும் ஒரு புதருக்கருகில் மறைந்து நின்று கேட்கிறாள்.)

கண்ணம்மா :—அய்யா ! நீங்கள் எங்கே போகிறீர்கள் ?

கலீல் :—காளையார் கோவிலுக்குப் போகணு'ம்மா ! காடு மத்தியிலே வந்து அகப்பட்டுக் கொண்டேன் ; வழி தெரியலே.

கண்ணம்மா :—நான் வழி சொல்கிறேன். எனக்கு ஒரு உதவி செய்யறீங்களா ?

கலீல் : ஓ ! என்னால் முடிந்தால் செய்யறேன்.

கண்ணம்மா :—உங்களால் செய்ய முடிந்ததுதான் !

கலீல் :—சொல்லு'ம்மா... கட்டாயம் செய்யறேன் !

கண்ணம்மா :—நீங்க அங்கே மருது ராசாவை பார்க்க முடியுமா ?

கலீல் :—(விழிப்புடன்) மருது ராசாவையா...

கண்ணம்மா :—ஆமாங்க... அவுகளிடம் ஒரு முக்கியமான சேதி சொல்லணும்.

கலீல் :—(கூர்ந்து நோக்கி) முக்கிய சேதியா...?

கண்ணம்மா :—ஆமாம்... எனக்கு உங்களே, முன்னே பின்னே தெரியாது. இருந்தாலும்......

கலீல் :—(நயத்துடன்) என் கூடப் பிறந்தவங்களா உன்னை நினைச்சு சொல்றேன். எதுவாயிருந்தாலும் சொல்லும்மா. நான் செய்யறேன்.

கண்ணம்மா :—ஒண்ணுமில்லிங்க. நாளைக்கு பறங்கிக்காரனுக காளையார் கோவில் மேலே படையெடுக்கப் போறுனுகளாம். நம்ம மருது சாமியை சாக்கிரதையா இருக்கச் சொல்லணும்.

கலீல் :—சரி'ம்மா ! அவசியம் சொல்றேன்.

கண்ணம்மா :—எனக்கு அண்ணனைப் போல ஒருத்தரு...ஆபத்தான நிலையில் இருக்காரு. அதனாலே தானுங்க நா(ன்) இப்படியே திரும்ப வேண்டியிருக்கு. இல்லேன்னு நானே கூட போய் சொல்லுவேன்.

கலீல் :—நீ வருத்தப்படாம' போ, ஆச்சி ! நான் போய் மருது சாமி காதிலே இப்பவே சேதியை போட்டுடறேன்... ஆங்... வழி சொல்றேன்னியே... சொல்றீயா...?

கண்ணம்மா :—(மேற்குப் பக்கம் காட்டி) இந்தப் பக்கமா நேராக போங்க. அங்கே ஒரு பெரிய மாமரம் இருக்கு. அதுக்கு கிழண்டை பக்கம் சுடலைக் காடு...அதைத்தாண்டி காட்டுப் புளியந்தோப்பிலே நுழைஞ்சு போனு கண்மாய்க்கரை தெரியும். ...அப்புறம் காளையார் கோவில்தானே...

கலீல் :—போதும்...போதும்...! இனிமே நான் போயிடுவேன். எனக்கும் இந்த வழி பழக்கம்தான். ஆனு, கொஞ்சம் வழி தவறிடுச்சு. இந்த இருட்டான புதரில் வந்து மாட்டிக்கிட்டேன்.

கண்ணம்மா :—அப்பொ, நான் வரட்டுங்களா? உங்களை நம்பிதான் போறேன்.

கலீல் :—அதைப்பற்றி என்னம்மா? ஒருத்தருக்கு ஒருத்தர் இந்த உதவி கூடவா செய்யக்கூடாது...

(கண்ணம்மா போகிறுள். கலீல் திரும்புகிறுன். முனியம்மா புதரிலிருந்து வெளியே வருகிறுள்.)

கலீல் :—என்ன, காட்டிலே ஒரே பொம்பளை மயமா இருக்கு...நீ யாரம்மா?

முனியம்மா :—என் பேரு முனியம்மா...! நீங்க யாரோ...எனக்கு முன்னே பின்னே தெரியாது. இருந்தாலும், என் கூடப் பொறந்த சகோதரனு நினைச்சு, உங்களுக்கு ஒண்ணு சொல்றேன். அதைச் செய்திங்கன்னு அப்புறம் நீங்க பணத்திலே புரளலாம்......

கலீல் :—என்ன'ம்மா......புதிர் போடறே...?

முனியம்மா:—புதிர் இல்லை...புத்தியுள்ளவங்க பொழைக்கற வழி... இங்க வாங்க சொல்றேன்..

(அவன் காதில் ஏதோ சொல்கிறுள். அவன் கண்கள் ஆச்சரியத்தால் விரிகின்றன.)

கலீல் :—அப்படியா...?

முனியம்மா :—ஆமா......ஒருவர் துன்பத்திலேதானே இன்னொருவர் இன்பம் விளையுது...வாங்க போவோம்......

(இருவரும் கண்ணம்மா காட்டிய திசைக்கு எதிர் திசையில் செல்கின்றனர்.)

—திரை—

(தொடரும்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திபெத்—சில விவரங்கள்

['சீனு']

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நடக்கவே கஷ்டமான இமய மலைப் பகுதிகளிலே 1500 மைல்களை 35 நாட்களில் பல சிரமங்களுக்கிடையே கடந்து இந்தியாவில் தஞ்சமடைந்து, மூசோரியில் தங்கியுள்ளார் திபெத்தின் தலைவர் தலாய் லாமா.

சீனத் திபேத்தியப் புகைச்சல் பற்றிய முழு உண்மை விவரங்களும் இன்னும் வெளியானதாகச் சொல்ல முடியாது. அதைப் பற்றி நாம் அறியப் பல நாட்கள் ஆகலாம். ஆனால் அபூர்வ நாடான திபேத்தைப் பற்றிய வேறு சுவையான விவரங்களை நாம் அறிய முடியும்.

உலகிலேயே உயரத்திலிருக்கும் நாடு திபேத். இதற்கு போயுல் என்று பெயர் உண்டு. கடல் மட்டத்திற்கு மேல் 10,000 அடியில் அமைந்துள்ளது இப் பீடபூமி. நாட்டின் பரப்பு 46,000 சதுர மைல். இதில் மூன்றிலொரு பாகம் (16,000 சதுர மைல்) ஏரிகள்.

சீனு, இந்தியா, பாகிஸ்தான், பர்மா ஆகிய நாடுகளைச் செழிக்கச் செய்யும் மஞ்சளாறு, யாங்ட்ஸீ, மீகாங், சால்வீன், ஐராவதி, ஸாங்போ (பிரம்மபுத்திரா), சிந்து ஆகிய நதிகள் திபேத்தில் உள்ள மலைச் சிகரங்களிலிருந்து உயிரும் பனி நீரே.

உலகத்தின் உன்னதமான எவரெஸ்ட் மலை இங்குதான் உள்ளது.

திபேத்தின் ஜனத் தொகை 13 லட்சம். ஆனால் வெளி நாடுகளில் உள்ள திபேத்தியர் 17 லட்சம்.

திபேத்தில் மழை நாளும் குறைவு; கோடையும் குறுகியதே. மழை நீரை விட, உருகும் பனி நீரையே திபேத்தியர் விவசாயத்திற்கு அதிகம் பயன்படுத்துகின்றனர். மரங்களே இல்லாத நாடு திபேத். ஆனால் அபூர்வ மூலிகைகளும் பூச்செடிகளும் நிறைய உண்டு.

எவ்வளவு உழைத்தாலும் அங்கு வியர்வை அரும்பாது. வரண்ட காற்றும் இளவெயிலும் ஆரோக்கியத்திற்கு உகந்தவை. இந் நாட்டில் தொத்து நோய்கள், க்ஷயரோகம் ஆகியவை கிடையா.

திபேத்தில் ரயில் வசதி கிடையாது. நூற்றாண்டுகள் கணக்காகப் பயன்பட்ட பிரயாணப் பாதைகள் பயன்படுகின்றன. ஆங்காங்கே 14 ஆயிரம் முதல் 18 ஆயிரம் வரை உயரமுள்ள மலைப் பகுதிகளிடையே இப் பாதைகள் செல்லும். ஆறுகளைக் கடக்க அமைக்கப்பட்டுள்ள கயிற்றுப் பாலங்கள் பலமாக, பயங்கரமாக ஆடினாலும் பத்திரமானவையே.

பிரயாணச் சாமான்களை யாக் என்னும் மிருகத்தின் மீதேற்றிச் செல்வார்கள் திபேத்தியர்.

தங்கம், வெள்ளி, இரும்பு, தாமிரம், துத்தநாகம், சல்பர் முதலிய கனிச் செல்வங்கள் திபேத்திய மண்ணில் உள்ளன என்று நிபுணர்கள் கூறுகிறார்கள்.

கடந்த பல நூற்றாண்டுகளாக திபேத்தின் மீது மங்கோலியரும் மஞ்சுக்களும், கூர்க்கர்களும் படையெடுத்திருக்கிறார்கள். ஆனால் சீனப் படையெடுப்புகளே அதிகம். சீனம் வலுவுடன் விளங்கிய போதெல்லாம் திபேத்தை வெற்றிகொள்ள ஒரு பெரும் படையை அனுப்புவது வழக்கம்; சீனாவில் வலுக் குறைந்த போதெல்லாம். அத் திபேத்தியர் திருப்பி யனுப்புவதும் வழக்கம்.

பல நூற்றாண்டுகளாகவே திபேத் பௌத்த பிட்சுக்களினால் ஆளப்பட்டு வருகிறது. பிட்சுக்களில் ஒரு பகுதியினர் இல்லற வாழ்க்கை நடத்துபவர். வேறொரு பகுதியினர் துறவிகள். நாளடைவில் துறவிகளின் செல்வாக்கே நாட்டில் ஓங்கியது. 1557-ல் மங்கோலியச் சக்கரவர்த்தி, இத்துறவிகளின் தலைவருக்கு, ஆளும் அதிகாரத்தை அளித்து தலாய் (கல்விக் கடல்) லாமா, என்ற பட்டப் பெயரும் கொடுத்தார். அவர் தான் முதல் தலாய் லாமா. ஐந்தாவது தலாய் லாமா லாஸாவின் பிரசித்திபெற்ற பொடாலா அரண்மனையைக் கட்டியவர். மேலும் அவர் தமது குரு (பஞ்சன்)வைச் சிறப்பிக்க வேண்டி அவருக்குத் தமக்கு அடுத்த அதிகாரத்தைக் கொடுத்தார். திபேத்தில் லாஸாவுக்கு அடுத்த பெரிய நகரமான ஷிகாட்ஸியில் பஞ்சன் லாமாவின் விடுதியை அமைத்தார். ஆனால் அன்று மரியாதைக்காக அளிக்கப்பட்ட அந்த ஸ்தானம் பிற்காலத்தில் பல முறை பெரும் சச்சரவுகளுக்கு உதவியது. பஞ்சன் லாமாவுக்கும் தலாய் லாமாவுக்கும் அபிப்பிராய பேதம் ஏற்படும் போதெல்லாம் ஒரு விசித்திரமான ஒற்றுமை இருப்பதை சரித்திரத்தில் பார்க்கலாம். இந்தியாவில் ஆளும் கட்சி எதுவானாலும் அது தலாய் லாமாவை ஆதரிக்கும். அது போலவே பஞ்சன் லாமாவை சீனா ஆதரிக்கும்.

இப்போது உள்ளவர் பதினாலாவது தலாய் லாமா. இவருக்கு முன்பு இருந்த பதின் மூன்றாம் லாமா, 1910-ம் வருஷம் இந்தியாவில், டார்ஜிலிங்கில் வந்து தங்கி, திபேத்தில் உள் நாட்டுக் குழப்பம் தீர்ந்த பிறகு திரும்பினார்.

தற்போதைய தலாய் லாமாவுக்கு 23 வயதாகிறது. இவர் தான் தலாய் லாமா என்பது இவரது இரண்டாவது வயதிலேயே தீர்மானிக்கப்பட்டது.

திபேத்தியர் நம்பிக்கைப்படி தலாய் லாமா இறப்பதில்லை. அவர் ஓர் உடலைக் கழற்றி எறிந்துவிட்டு ஓர் புதிய உடலில் புகுகிறார். அவ்வளவே. ஆகவே ஒவ்வொரு முறையும் ஒரு தலாய் லாமா

காலமானதும் அவரது புதிய உடலைக் கண்டு பிடிக்க நாடெங்கும் தேடுவார்கள்.

பதின்மூன்றாவது தலாய் லாமா 1933-ல் காலமானதும் புதிய லாமாவைத் தேடும் முயற்சி நான்கு ஆண்டுகள் நடைபெற்றது. திபெத் எங்கும் தேடியும் காணாமல், சீனாவின் திபெத்தியர் வாழும் பகுதியான சிங்கை மாகாணத்தில் போய்த் தேடினார்கள்.

பதின் மூன்றாவது தலாய் லாமாவோடு சண்டையிட்டுப் பிரிந்து சென்ற ஒன்பதாவது பஞ்சன் லாமா அங்கு மரணப் படுக்கையில் இருந்தார். தமது இறுதிக் காலத்தில் அவர் பழம் மனஸ்தாபத்தை மறந்து தலாய் லாமாவைத் தேடி வந்தவர்களுக்கு உதவினார். அவ்வட்டாரத்தில் உள்ள மூன்று குழந்தைகளைக் குறிப்பிட்டு அவர்கள் தலாய் லாமா ஆவதற்குத் தகுதியுள்ளவர்கள் என்றார்.

மூன்று குழந்தைகளில் இரண்டு குழந்தைகள் தலாய் லாமாவாக இருக்க முடியாது என்று துறவிகள் முடிவு கட்டினர். மூன்றாவது குழந்தையை நெருங்கிய போது அவர்கள் வியப்பால் ஸ்தம்பித்துப் போயினர். அந்தக் குழந்தை இவர்களை நெருங்கி, 'லாமா', 'லாமா!' என்று கூவியது. அவன் பெயர் லாமோ தோன்டப். தேடி வந்த பிட்சுக்களின் பெயர்களைச் சரியாகச் சொல்லியது குழந்தை. பதின் மூன்றாவது தலாய் லாமா பயன்படுத்திய பொருள்களை அடையாளம் கண்டு பிடித்தது. பெரிய செவிகள், சில குறிப்பிட்ட மச்சங்கள் முதலியன அவன் உடலில் இருந்தன.

பதினான்காவது லாமா அகப்பட்டுவிட்டார். ஒரே மகிழ்ச்சி. ஆனால் ஒரு தடை குறுக்கிட்டது. சிங்கைப் பிரதேசத்துச் சீன அதிகாரி ஒன்றரை லட்சம் ரூபாய் கொடுத்தால்தான் அக்குழந்தையை அழைத்துச் செல்லலாம் என்று தடை விதித்தார். நாட்டு எல்லையில் மேலும் நாலரை லட்சம் ரூபாய் கேட்டனர். திபெத்திய துறவிகள் அப் பணத்தைக் கொடுத்துக் குழந்தையை எடுத்துச் செல்ல மேலும் இரண்டு ஆண்டுகள் பிடித்தன.

—"தினமணி"

அறிவுச் சுடர்

கணவனும் மனைவியும் கத்தரிக்கோலின் இரு கைகள் போன்றவர்கள். பல சமயங்களில் ஒருவரை ஒருவர் எதிர்த்துக்கொள்வார்கள். ஆனால், அவர்களுடைய நல்வாழ்வுக்குக் குறுக்கே யாராவது வந்தால் அவர்களைத் தண்டிக்கவோ தயங்கமாட்டார்கள்.

— சிட்னி சிமித்

செங்கற்பட்டு மாவட்டக் கழகத் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் யூனியன்

காரியக் கமிட்டிக் கூட்டம்—மகாபலிபுரம்

2—5—59

ஜில்லா போர்டு மூலமாக அரசியலாருக்கு அனுப்பும்

தீர்மானங்கள் :

1. சம்பள அமைப்பு எல்லா ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கும் ரூபாய் 60-4-120 ஆகவும் செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு 75-5-250 ஆகவும் நிர்ணயிப்பதோடு கிராக்கிப்படியும் தரவேண்டும்.

2. வேலையை விட்டு ஓய்வு பெறும் கெடு 60 வயதாக உயர்த்தப்பட வேண்டும்.

3. எல்லா ஆசிரியர்களுக்கும் அந்தந்த கிரேடுக்குத் தகுந்தபடி ஒரே வித சம்பளம், மத்திய சர்க்கார் விகிதப்படி கிராக்கிப்படிகள், லீவு முதலிய வசதிகள் இருத்தல் வேண்டும்.

4. குறைந்தபட்சம் 30 ரூபாய்க்குக் குறையாமல் கடைசி மூன்று வருஷ சம்பளத்தின் சராசரி தொகையில் நான்கில் ஒரு பங்கு பென்ஷனாக அளித்திடவேண்டும்.

5. ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களையும் சென்னை கவுன்சில் ஆசிரியர்கள் தொகுதியில் சேர்க்கவேண்டும்.

6. ஆசிரியர்கள் வீடு கட்டிக் கொள்வதற்கு வசதி ஏற்படுத்தித் தரும் கட்டிட திட்டமொன்றை சர்க்கார் ஆரம்பிக்க வேண்டும்.

7. பஞ்சாயத்து யூனியன் ஏற்படும்போது ஆரம்பக் கல்வி வளர்ச்சியைக் கவனிக்க சுதந்திரமுள்ள ஒரு கல்விக் கழகம் (Education Council) ஏற்படுத்த வேண்டும். அதில் ஆரம்ப ஆசிரியர்களுக்கென சில ஸ்தானங்கள் ஒதுக்கப்பட வேண்டும்.

8. G. O. 2628 17-8-52 உத்தரவுப்படி ஆசிரியர்களின் குடும்பங்களுக்கு இலவச மருத்துவ வசதி அளிக்கப்பட்டிருந்தும், அதைப் பெற முடியாமலிருப்பதால் ஆசிரியர் இருக்கும் இடத்திலேயே கைவைத்திய வசதியைப் பெற தகுந்த ஏற்பாடு செய்தல் வேண்டும்.

9. எல்லா ஆசிரியர்களுக்கும் வீட்டு வாடகை அலவன்ஸ் தருதல் வேண்டும்.

10. ஆரம்பப் பாடசாலைகளில் 25 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற கொள்கையை ஏற்றருள வேண்டும்.

11. N. G. O. வினருக்குள்ள எல்லாச் சலுகைகளும் ஆசிரியர்களுக்கும் அளிக்க வேண்டும்.

12. G. O. M. S. 1612 24-10-50 படி பண்டிகைகளுக்கு முன் பணமாக கொடுத்து உதவுவதில் ஸ்தல ஸ்தாபனங்களின் விருப்பத்திற்கு விட்டிருப்பதால் அச்சலுகையைப் பெற முடியாமல் இருக்கிறது. அவசியம் பண்டிகை அலவன்ஸ் தரவேண்டும் என விதி செய்யவும். ஜில்லா போர்டில் பணமில்லையானல் ராஜ்ய சர்க்கார் ஷை பண்டிகை அலவன்சுக்கு முன் பணம் கொடுத்து உதவவும் வேண்டும்.

13. IV, V, VI படிவங்களில் மாணவர்கள் மேல் வகுப்புக்கு மாறுவிட்டால் அவர்கள் சம்பளம் கட்ட வேண்டும் என்று இருத்தலை மாற்றி ஹரிஜன பிள்ளைகளுக்குண்டான சம்பள சலுகைப் போல் ஆசிரியர்களின் குழந்தைகளுக்கும் இருந்திட வேண்டும்.

14. செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு 1956-ம் வருஷம் நவம்பரில் சம்பளம் உயர்த்தியதில் பல ஆண்டு ஊழியம் செய்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு வெயிட்டேஜ் போட்டுத் தரவேண்டும்.

ஜில்லா போர்டாருக்குச் சமர்ப்பிக்க நிறைவேற்றிய தீர்மானங்கள்

1. சனிக்கிழமைகளில் முழு விடுமுறையிட்டு வருவதற்கு யூனியன் நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறது.

1959-60-ம் ஆண்டு அங்ஙனமே இருக்க வேண்டிக் கொள்ளுகிறது.

2. சிறு விடுதி தவிர மற்ற விடுதிகள் எடுத்தால் அலுவலக உத்திரவு பெற்றே வேலையில் சேரவேண்டும் என்ற நிபந்தனையை 16-5224/54 C 7 5-4-54 மூலம் தெரிவிக்கப்பட்டது. அதனல் பள்ளிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களை விளக்கிக் கூறியதில் ஜில்லா போர்டார் ரத்து செய்தார்கள். மீண்டும் அதை Roc. 36542/57 C 2

16-1-1958ல் அமுலுக்குக் கொண்டு வந்திருப்பதைப் புனராலோசனை செய்து கான்ஸல் செய்ய வேண்டும்.

3. ஆசிரியர்கள் இரண்டு ஆண்டுகள் ஊழியம் முடிந்த பிறகு வேலையைக் காயப்படுத்தி P. F. ல் சேர்ந்து நன்மை பெற அப்போதைக்கப்போது ஏற்பாடு செய்ய வேண்டும்.

4. சென்னை நகரப் பள்ளிகளில் நடைமுறையில் உள்ளபடி ஆண்டு சம்பள உயர்வை ஒவ்வொரு பள்ளி தலைமை ஆசிரியர்களும் உயர்வு வரும் தேதி பிரகாரம் எழுதி அனுப்பி உயர்வைப் பெற வழிவகை செய்தல் வேண்டும்.

5. ஆசிரியர்கள் ஊழியப் புத்தகத்தைத் தாலுகா வாரியாக அடுத்த பள்ளி வருஷத்தில் ஆசிரியர்களுக்குக் காண்பித்து தவறு இருப்பின் திருத்தம் பெற ஏற்பாடாக வேண்டும்.

6. அகால மரணம் அடையும் ஆசிரியர் குடும்பங்களின் நன்மைக்காகப் பல ஆண்டுகளாக முயற்சித்து வரும் Mutual Benefit Fund Scheme ஐ சென்னை கார்பரேஷன் ஆசிரியர்களுக்கு ஆணையாளர் முதலியோர் நடத்தி வருவது போல ஸ்பெஷல் ஆபீசர் அவர்கள் நடத்திக் கொடுக்க உதவி புரிதல் வேண்டும்.

7. Punishment, Request இந்த இரண்டுவித மாறுதல்களைத் தவிர மற்ற எவ்வித மாறுதல்களைச் செய்யாதிருக்கவும், Transfer செய்யும்போது கீழ்க்கண்டவைகளையும் கவனித்துச் செய்ய கேட்டுக்கொள்ளல்.

   i. மாறுதல் பள்ளி வருஷ ஆரம்பத்தில் செய்தல்.

   ii. ஒரு ஆசிரியரை மாற்றும்போது மற்ற ஆசிரியருக்குப் பாதகம் இல்லாதிருத்தல்.

   iii. ஒரு பள்ளியில் ஏதாவது ஆசிரியர் ஸ்தானம் குறையுமானால் அதிக சர்வீஸானவரை மாற்றாமல் குறைந்த சர்வீஸ் உள்ளவரை மாற்றுதல்.

   iv. ஒரு ஆசிரியரை உதவியாக மாற்றிவிட்டுக் கொஞ்சநாள் கழித்து அதே பள்ளியில் அவரைத் தலைமையாக மாற்றித் தலைமையாக இருந்தவரை உதவியாக மாற்றுதல் கூடாது.

   v. யாது காரணத்தாலோ ஒரு ஆசிரியரை மாற்றினால் அதை பின்னிட்டு ரத்து செய்து வேறு ஆசிரியரை மாற்றுதல் கூடாது.

8. ஜில்லா போர்டுக்கு அனுப்பும் தபால்களுக்கு உடனடியாகப் பதில்களைத் தெரிவிக்காமல் காலதாமதம் செய்யப்படுவதை தவிர்க்க வேண்டும்.

9. G. O. M. S. No. 1675 Finance 24-10-55 பண்டிகை அலவன்ஸ் தருவதில் போர்டாருடைய அபிப்பிராயத்தில் விட்டிருப்பதால் அதை ஜில்லா போர்டார் பயன்படுத்திக்கொள்ளாமல் ஆசிரியர்பால் கருணை வைத்து ஆசிரியர்களுக்கு உதவ முன் வரவேண்டுமென்றும்,

போர்டாரிடம் பணம் இல்லையானாலும் ஆசிரியர்களுக்குக் கொடுக்கத் தேவையான பணத்தை அரசியலாரிடமிருந்து சகாயத் தொகையாகப் பெற்று ஆசிரியர்களுக்கு உதவிட வேண்டும்.

10. ஜில்லா போர்டு உத்தரவின் பேரில் வளர்ந்தோர் கல்வி பள்ளிகள் திறந்து பின் சில பள்ளிகள் மூடப்பட்டன. அப்படி மூடப்பட்ட பள்ளிகளில் வேலை செய்தவர்களுக்கு வேலை செய்த காலத்துக்கு ஊதியம் சேராதவர்களுக்கு ஊதியம் அளித்திட வேண்டும்.

11. ஆசிரியர்களுக்கென ஒரு ஐக்கிய நாணயச் சங்கம் ஏற்படுத்தித் தர உதவி அளிக்க வேண்டும்.

12. Life Insurance-ல் பாலிஸி எடுத்துக்கொள்ளும் ஆசிரியர்களுக்கு அவர்கள் P. F. நிதியிலிருந்து பிரிமியம் ஜில்லா போர்டார் கட்டி உதவி புரிதல் வேண்டும்.

13. 25-1-1958-ல் சைதாபேட்டையில் நடந்த 10-வது மாநாட்டில் நிறைவேற்றியனுப்பிய தீர்மானங்களுக்கு ஜில்லா போர்டார் Roc. No. 5923/58 C 1 11-9-58 மெமோவில் கொடுத்த பதில்களில் பல திருப்தி அளிக்கவில்லை. அவைகளை மறு முறை பரிசீலித்து நன்மையான பதில் அளித்திட வேண்டும். அவை வருமாறு :—

a. Experienced Secondary grade teachers should be selected and sppointed as headmasters of the Board Elementary Schools having 4 teachers.

b. Village Munsiff certificates need not be insisted for the giant of P. F. loans to teachers:

c. Increase of contingent charges at 0.50 Np. per teacher due to increase in cover articles.

d. To grant P. F. loans calculated 10 times of their pay.

e. Posting of substitutes in the vacancies Caused by the deputation of teachers for the retraining Course in Basic Education.

f. Payment of regular T. A. to teachers who accompany the headmaster to encash salary cheques.

g. The Bord Ele. Schools teachers should be allowed to slect text books for the individual school use.

h. Increase of Postage charges at Rs. 2/-Per School due to increase in the postal rates.

i. Supply of uniform to the Scout & Scout Master in Board Schools.

j. The union should be consulted for transfering teachers and copies of the transfer orders sent to the union also.

C. BALASUBRAMANIAN,
Secretary,
Dt. Ele. Sc. Tes. Union.
2—5—59.

அறிவுச் சுடர்கள்

நாம் வேண்டுவதென்ன? இரத்தத்தில் பலம், நரம்புகளில் வலிவு. இரும்பு போன்ற தசை நார்கள். இவைகளே நமக்கு வேண்டும். தளர்ச்சியைத் தருகிற கனிவுமிக்க கொள்கைகள் நமக்குத் தேவையில்லை.

— விவேகானந்தர்

உண்மை, செயலில் இறங்கும்போது, அதற்கு நீதி என்ற பெயர் உலகத்தால் சூட்டப்படுகிறது.

— டிஸ்ரேலி

புது வாழ்வை அளிக்கும் பொறி இயல்

[கு. அண்ணுமலே, காஞ்சி.]

ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே காடுகளில் பதுங்கிக் கிடந்த மனிதன், இன்று நாடுகள் அமைத்து நகரங்களை நிறுவியிருக்கிருன். அன்றையதினம் மலேக் குகைகளிலேயும் மரக் கிளேகளிலேயும் வாழ்ந்தவன் இன்றைய தினம் மாட மாளிகையும் கூட கோபுரங்களையும் நிறுவி அவற்றிற்குள்ளே ஆநந்தகீதம் பாடிய படி வாழ்கிருன். அன்றையதினம் அடுத்த ஊர் செல்வதற்குத் தேவையான வசதிகள் பெற இயலாமல் துடித்தவன், இதுபோது உலகம் முழுவதையும் சில மணி நேரங்களில் சுற்றிப் பறந்து திரும்பி வந்துவிடுகிருன். ஆழ் கடலின் அகலத்தையும், அகன்ற வானத்தின் பெரும் பரப்பையும, ஓடோடிவரும் ஜீவ நதிகளின் பயங்கரக் கூச்சலேயும், கண்டு கண்டு பயந்தவன்,இன்றையதினம் அவற்றை யெல்லாம் அடக்கி ஆண்டு நிமிர்ந்து நின்று மானிட சக்திக்கு நிகரானசக்தி வேறொன்றுண்டோ என்று வீர முழக்கம் புரிகிருன். உண்ணும் உணவு, உடுக்கும் உடை, இருக்கும் வீடு, நடக்கும் வீதி, செல்லும் வாகனம்,எழுதும்கருவி,படிக்கும் ஏடு அத்தனையிலேயும் ஒரு மாபெரும் மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. சென்ற பல நூற்றுண்டுகளில் மனித சமுதாயம்பெற்றிருக்கிற இத்தனை மாறுதல்களுக்கும் வெற்றிகளுக்கும் நாகரிகத்தின் கனி சிறந்த வளர்ச்சிக்கும் மிக முக்கியமானதோர் காரணம்பொறி இயல் கலேயின் வளர்ச்சி என்பதை யார் மறுக்க முடியும்?

கண்ணேக் கவரும் கான்க்ரீட் சாலேகள் கருத்தைக் கவரும் வகையில் அமைந்து கிடக்கின்றனவே, அவற்றை அமைத்துத் தந்தது எது? ஹைவே எஞ்சினீரிங்! ஆகாயத்தை எட்டிப் பிடிக்கும் எண்ணம் கொண்டனபோல எழு பதடுக்கு எண்பதடுக்கு மாளிகைகள் செம்மாந்து நிற்கின்றனவே, நியூயார்க் போன்ற நகரங்களில்— அந்த அழகு மாளிகைகளை உருவாக்கித் தந்தது எது? சிவில் எஞ்சினீரிங்! மேட்டூர், பாபநாசம், சிவ சமுத்திரம், தாமோதர், பக்ரா-நங்கல் போன்ற எண்ணற்ற பல மின்சாரத் திட்டங்களை உருவாக்கி, ஆற்று நீரிலிருந்து அரியதோர் சக்தியைப் பிரித்தெடுத்து, அதன்மூலம் இயந்திரங்களை ஓட்டவும், விளக்குகளை எரிக்கவும், விசிறிகளைச் சுழற்றவும், தேவையான ஆற்றலே அளித்துவருவது எது? விளக்கவும் வேண்டுமா— எலக்ட்ரிக் எஞ்சினீரிங். அழகழகான ஆடைகளையும், விதம் விதமான இரும்புக் கருவிகளையும், நூற்றுக் கணக்கான ப்ளாஸ்டிக் பொருள்களையும், ஆயிரக் கணக்கான புத்தகங்களையும், பேனு

பென்சில், தாள், மை, கண்ணாடி, சோப்பு, சீப்பு என எண்ணற்ற பல பண்டங்களையும் தருகிற தொழிற்சாலைகளுக்குத் தேவையான இயந்திரங்களை உருவாக்கித் தந்தது எது? தெரியாதா நமக்கு? மெகானிகல் எஞ்சினீரிங்!

நினைத்துப் பார்த்தால் நம் மனக்கண் முன் மளமளவென்று தோன்றும். எஞ்சினியரிங் கலையின் விளைவாக நமக்கு ஏற்பட்டுள்ள வசதிகள் எத்தனை எத்தனை என்பது தெளிவாக விளங்கும். ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டுமானால் மனித வாழ்க்கைக்கு வசதியும் விளக்கமும் நயமும தெளிவும் அளிக்கும் வசீகர சக்தியே எஞ்சினியரிங் கலை.

எங்கெந்த நாடுகளில் இந்தக் கலை தலைசிறந்து விளங்குகிறதோ அந்தந்த நாடுகள்தாம் உலக அரங்கிலே முதலிடம் பெற முடியும். பத்தொன்பதாம் நூற்றுண்டு முழுவதிலும், பிரிட்டன், உலக நாடுகளின் முதல்வனாக விளங்கிற்று. காரணம், அந்த நாளிலே, எஞ்சினிரிங் கலையும் அதன் விளைவாகிய தொழில் வளர்ச்சியும் அந்த நாட்டிலேதான் மடமடவெனப் பெருகியிருந்தது. இந்த நூற்றுண்டின் முதற் பகுதியில் ஜெர்மனி, வெகு விரைவில் முன்னேறி, இங்கிலாந்தைப் பார்த்து என்ன சேதி என்று கேட்கிற அளவுக்கு வளர்ந்துவிட்டதென்றால் அதற்குக் காரணமும் அந்த நாட்டில் ஏற்பட்ட இயந்திர வளர்ச்சிதான். இன்றையதினம் சோவியத் ரஷ்யாவும் அமெரிக்க நாடும், ஏனைய எல்லா நாடுகளும் பார்த்துப் பயப்படுகிற அளவுக்கு வளர்ந்து விட்டிருக்கின்றனவே, இந்த வளர்ச்சியின் அடிப்படையும எஞ்சினியரிங் கலையின் முன்னேற்றமே என்பதை, உலக வரலாற்றை ஊன்றிப் படித்த எவர்தான் மறுத்துவிட முடியும்?

இதோ, இந்தியா, தன்னுடைய முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை முற்றிலும முடித்துவிட்டு, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் மூன்று ஆண்டுகளை முடித்து விட்டது. இந்த இரு திட்டங்களிலேயும் எஞ்சினியரிங் கலைக்கு முதல் இடம் தரப்பட்டிருக்கிறது. தரப்படத்தானே வேண்டும்? தரப்பட்டால்தானே இந்தியா முன்னேற முடியும்?

பிற பல நாடுகளைவிட இந்தியாவில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரம் மிகவும் பின்னணியில் இருக்கிறது. இன்னமும் நம் மக்களில் நூற்றுக்கு எண்பது பேர் விவசாயத் தொழிலையே முழு மூச்சோடு நம்பிக் கொண்டிருக்கின்றனர். நாட்டின் மக்கட் தொகையோ ஆண்டுதோறும் நூற்றுக்கு ஒன்றரைப் பங்கு வீதம் வளர்ந்தபடி இருக்கிறது. வளரும் ஜனத்தொகையும், வேறு தொழில்கள் இல்லாக் காரணத்தால், விவசாயத்தின்மீதே தன் கண்ணோட்டத்தைச் செலுத்தி, விவசாயத்திலிருந்து ஒவ்வொரு மனிதருக்கும் கிடைக்கக்கூடிய சராசரி வருமானத்தை மேலும் குறைத்துவிடு

கிறது. படிக்காதவர்களிலும் சரி படித்தவர்களிலும் சரி, வேலையில்லாமல் தவிப்பவர்களோ இலட்சக் கணக்கில் உள்ளனர். இந்தக் கொடுமைகளும் குறைபாடுகளும் குறைய வேண்டுமானால் நூற்றுக்கணக்கான புதிய தொழிற்சாலைகள் நாட்டிலே ஏற்பட்டாகவேண்டும். மின்சார வசதியின் அளவு பெருகி, அதன் உற்பத்திச் செலவு குறைந்தாக வேண்டும். உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருள்கள் பல்வேறு இடங்களிலிருந்து தொழிற்சாலைகளுக்குச் செல்லவும், உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் வெவ்வேறு மார்க்கட்டுகளுக்குச் செல்லவும் ரயில்வே பாதைகளும் நெடுஞ்சாலைகளும் புதிது புதிதாகப் போடப்படவேண்டும். ஆலைத் தொழிலாளர்களுக்கும், மத்தியதர வகுப்பினருக்கும், அரசாங்க ஊழியர்களுக்கும் குறைந்த செலவில் கட்டிடங்கள் கட்டப்படவேண்டும். ஆம்—செய்யப்படவேண்டிய செயல்கள் ஏராளம் ஏராளம். அந்தச் செயல் ஒவ்வொன்றையும் முடிக்க எஞ்சினீரிங் கலையின் முழு உதவியும் தேவை. முன்னேற்றம் என்கிற இலட்சிய பூமிக்குச் செல்ல எஞ்சினீரிங் கலை என்கிற பாதை வழியாகத்தான் சென்றாகவேண்டும் இந்தியா! இந்தியாமட்டுமென்ன—எந்த நாடும்!

புரட்சித் தலைவர் லெனின் சொன்னார்: சமதர்மம்+மின்சாரம்=புதிய ரஷ்யா என்று.

அது 1923-ல்!

நாம் சொல்லவேண்டும்: சமதர்மம் + எஞ்சினியரிங் = புதிய இந்தியா என்று.

இது 1959-ல்!

(48-ம் பக்கத் தொடர்ச்சி)

உடையினால் ஒழுக்கம் கெடுவதற்கு இடமில்லை. ஆனால் நோக்கத்திலேயே தவறு இருந்தால், ஒழுக்கத்தில் கோளாறு ஏற்படுகிறது. கணவன் மகிழ்வதற்காக என்று மட்டும் உடுக்காமல், ஊரில் உள்ள மற்ற ஆண்களின் கண்களைக் கவரவேண்டும் என்று உடை உடுத்தல் அப்படிப்பட்டது. மனைவி மகிழ்வதற்காக என்று உடுத்தாமல், மற்றப் பெண்களின் கண்களுக்குக் கவர்ச்சியூட்டுவதற்காக உடுப்பதும் அப்படிப்பட்டதே ஆகும். பெற்றோரும் சுற்றுப்புறத்தாரும் மகிழ்வதற்காக என்று அளவுடன் நிற்காமல், மற்றவர்களின் மனத்தைக் கவர்வதற்காகவே மாணவரும் மாணவியரும் உடை உடுத்தால், அதுவும் அப்படிப்பட்டதே ஆகும். ஆகவே நோக்கம் தவறும்போது, உடை தவறானதாக மாறிவிடுகிறது. அங்குத்தான் உடை ஒழுக்கத்தோடு தொடர்பு உடையது என்னும் உண்மை விளங்குகிறது.

—"தையற்கலை"

வானில் பூத்த நிலவு!

[அறிவுடை நம்பி]

நாள்தோறும் நாம் எவ்வளவோ பொருள்களைப் பார்க்கிறோம். பார்த்த அளவோடு அமைந்துவிடுகிறோம். அவற்றைப் பற்றிய எந்த சிந்தனைக்கும் இடங்கொடுப்பதில்லை பார்க்கின்ற பொருள்கள் அனைத்தைப் பற்றியும் நாம் கவலைப்பட்டுக் கொண்டிருப்பதில்லை. நம் கண்ணில் பட்டுக் கருத்தில் படாத பொருள்கள் எவ்வளவோ காட்சியளிக்கின்றன!

எடுத்துக்காட்டாகத் திங்களை எடுத்துக் கொள்ளுவோம். களங்கமற்ற திறந்த வானவெளியில், நல்ல இரவு வேளையில், ஒளி வீசித் தொங்கிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். திங்கள் எவ்வாறு வானத்தில் தொங்கிக் கொண்டிருக்கிறது, அதனைத் தொங்கவிட்டுக் கொண்டிருப்பது எது என்ற கேள்விகளைத் தம்மைத் தாமே கேட்டுக்கொண்டு அவைகளுக்கு விடைகாண முற்படுபவர்கள் எவ்வளவு பேர்கள் இருக்கப்போகிறார்கள்?

வானவெளியில் எவ்வளவோ கோள்கள் (கிரகங்கள்) திங்களைப் பெறாமல் வாழ்கின்றன. அப்படிப்பட்ட கோளிலிருந்து உலகத்திற்குத் திடீரென்று யாரேனும் வந்துசேர்ந்தால், வெள்ளித் தட்டு ஒன்று வானத்தில் மிதந்து கொண்டிருப்பதைக் கண்டு வியப்படைந்துபோவார். வானநூலறிவு அவருக்கு இல்லை என்று வைத்துக்கொண்டால், எப்படி வானத்தில் அது நகர்ந்துகொண்டிருக்கிறது என்பதை எண்ணி எண்ணிப் பூரித்துப்போவார். அப்படிப் பூரித்துப்போகிற மக்கள் நமது நாட்டில் இன்னமும் ஏராளமாக இருக்கவே செய்கிறார்கள்.

இந்தக் கேள்விக்கான விடையைச் சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு, அறிவியல் பேரறிஞர் ஒருவர் தற்செயலாகக் கண்டுபிடித்தார். அவர்தான் சர் ஐசக் நியூட்டன் என்பவர் ஆவார். நம்மை எந்த ஆற்றல் உலகத்தில் தாங்கிக் கொண்டிருக்கிறதோ அதே ஆற்றல்தான் திங்களை வானத்தில் தாங்கிக் கொண்டிருக்கிறது; அதுதான் உலகின் ஈர்ப்பு (Gravity) ஆகும்.

உலகின் சில தொலைவிற்கு மேலே ஈர்ப்பு ஆற்றல் அடியோடு அற்றுப்போய்விடுகிறது என்று பொதுவாகப் பலரும் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அது உண்மையல்ல. உலகின் ஈர்ப்பு ஆர்றல் மிகத் தொலைவிலுள்ள உடுக்கள் (நட்சத்திரங்கள்) வரையிலுங்கூடச் செல்லுகிறது. ஆனால் போகப்போக ஈர்ப்பாற்றல் வலிவிழக்கிறது. உலகைவிட்டுக் கோடிக்கணக்கான மைல்களுக்கு அப்பால் ஒருவர் சென்று

நின்றுபார்த்தால், அவ்விடத்தில் உலகின் ஈர்ப்பு ஆற்றல் மிகமிக அருகிப் போய்தானிருக்கும்.

ஈர்ப்புப் பற்றிய விதியைக் கண்டறிந்து முதன்முதல் உலகுக்கு அறிவித்தவர் சர் ஐசெக் நியூட்டன் ஆதலால், அந்த விதி நியூட்டனின் ஈர்ப்பு விதி (Newton's law of gravitation) என்று பெயர் பெறுவதாயிற்று. தொலைவு இரண்டு பங்கு ஆனால், ஈர்ப்பு ஆற்றல் கால்பங்கு அளவிற்கு வந்துசேருகிறது என்பது அவர் கண்டறிந்த விதியாகும். தொலைவு பத்துபங்கு அளவிற்குக் கூடப் போனால், ஈர்ப்பு நூற்றில் ஒருபங்கு அளவிற்குக் குறைந்துவிடுகிறது.

ஈர்ப்பு என்று சொல்லும் போது, நம்மை உலகத்தோடு சேர்த்துவைத்து எந்த ஆற்றல் இழுத்துப்பிடித்துக் கொண்டிருக்கிறதோ, அந்த ஆற்றலை மட்டுந்தான் நினைவுபடுத்திக் கொள்கிறோம். வானவெளியில் உலாவும் ஒவ்வொரு கோளும், ஒவ்வொரு பொருளும் அதனதற்கென்று தனித்தனியான ஈர்ப்பு ஆற்றலைக் கொண்டிருக்கின்றன. அளவையும், எடையையும், பொறுத்து ஈர்ப்பு ஆற்றல் ஒவ்வொரு கோளுக்கும் வேறுபடுகிறது. வியாழன் என்ற கோளை எடுத்துக்கொண்டால், அது உலகை விட மூன்றுமடங்கு மிகவான ஈர்ப்பாற்றலை யுடையதாக விளங்குகிறது. திங்களை எடுத்துக்கொண்டால், அது உலகின் ஈர்ப்பாற்றலிலே ஆறிலே ஒரு பங்கு ஆற்றலைத்தான் உடையதாக இருக்கிறது.

திங்களை எது தாங்கிக்கொண்டிருக்கிறது? என்ற கேள்விப்பக்கம் சற்றுத் திரும்பி விடை காண முற்படுவோம். பலகோடிக்கணக்கான டன்கள் எடையுள்ள ஆற்றலைக்கொண்டு உலகமும் திங்களும் ஒன்றையொன்று எதிரெதிர் இழுத்துப் பிடித்துக்கொண்டிருக்கின்றன. திங்களுக்கு ஈர்ப்பு ஆற்றலும் இயக்கமும் இல்லை என்றால், திங்கள் உலகோடு மோதிச் சுக்குநூறாக உடைந்துபோயிருக்கும்.

திங்கள் கீழே விழுந்துவிடாதபடி உலகைச் சுற்றிவரக்கூடிய ஒருவகை இயக்கத்தைக் கொண்டிருக்கிறது. அது உலகைச் சுற்றி, ஒரு பெரிய வட்டத்தில், மணிக்கு 2000 மைல் வேகத்தில் சுற்றிவருகிறது (அது உலகை ஒரு தடவை சுற்றி முடிக்கும் போது தன்னைத் தானேயும் ஒரு தடவை சுற்றிக்கொள்கிறது). அந்த வேகத்தைக் குறைத்துக் கொள்ளாமல் இருக்கும் காலம் வரையிலும், திங்கள் இடம் விட்டுச் சரிவதற்கு வழியே இல்லை.

ஒரு கயிற்றின் முனையில் ஒரு கல்லைக் கட்டிவிட்டு, அதன் மற்றொரு முனையைப் பிடித்துக் கொண்டு, ஒருவர், தம்மைச் சுற்றி ஒரு வட்டத்தில் அந்தக்கல் சுழலும்படிச் சுழற்றுவதற்கு மிகக்குறைந்த முயற்சியே போதுமானது என்பதை ஒவ்வொருவ

ரும் நன்கு அறிவார்கள். இந்த அடிப்படையில்தான் திங்களும் உலகைச் சுற்றிவருகிறது என்னலாம். சுற்றும்போது கயிறு கல்லை இழுத்துக்கொண்டிருப்பதைப்போல திங்கள் சுழலும் போது உலகின் ஈர்ப்பு ஆற்றல் அதனை இழுத்துப் பிடித்துக் கொண்டிருக்கிறது.

சுருங்கச் சொன்னால், திங்களின் சுழலும் வேகம் அதனைக் கீழே விழாமல் காத்துக் கொள்கிறது; உலகின் ஈர்ப்பாற்றல் வான வெளியில் பறந்து போய் விடாதவாறு அதனைத் தடுத்துக் கொள்கிறது.

உலகத்திலிருந்து சற்றுத் தொலைவாக விலகவேண்டிய நிலை ஏற்பட்டாலும் வேகம் அதற்குத் தகுந்தாற்போல் சரிப்படுத்திக் கொள்ளப்படுகிறது. அதனால்ஒரு தவறும் ஏற்பட்டுவிடுவதில்லை. திங்கள் உலகைச் சுற்றி வட்ட வடிவமான சுவட்டில் ஓடவில்லை. ஏறத்தாழக் கோழிமுட்டை வடிவான சுவட்டில்தான் ஓடுகிறது. உலகிற்கு அருகிலும் சேய்மையிலும் மாறிமாறி வந்துபோக வேண்டிய நிலை திங்களுக்கு ஏற்பட்டாலும், கால அளவு சராசரியாகச் சரியாகிவிடுகிறது.

கயிற்றிலே கல்லைக் கட்டிவிட்டுச் சுழற்றும்போது, கயிற்றின் நீளம் குறைவாக இருந்தால் விரைவாகச் சுற்றுவதையும், கயிற்றின் நீளம் மிகவாக இருந்தால் மெதுவாகச் சுற்றுவதையும் பார்க்கிறோம். இந்த விதி கோள்களைச் சுற்றி வரும் திங்களுக்கும், கதிரவனைச் சுற்றிவரும் கோள்களுக்கும் பொருந்தும். கதிரவனுக்கு அருகில் இருக்கும் சுக்கிரன் என்ற கோள் ஒரு நொடிக்கு (செகண்டிற்கு) 30 மைல் வேகத்தில் சுற்றுகிறது; ஆனால் மிக்கத் தொலைவிலுள்ள புளூட்டோ என்ற கோள் ஒரு நொடிக்கு 3 மைல் வேகத்தில்தான் சுற்றுகிறது. சில கோள்கள் பத்துப் பன்னிரண்டு திங்களைக் கொண்டனவாக இருக்கின்றன. அவைகள் பல்வேறு தொலைவுகளில் நின்று பல்வேறு சுவடிகளில் சுற்றுகின்றன. உலகில் இருந்து சுமார் 2,50,000 மைலில் இருக்கும் திங்கள், சுமார் 200 மைல்களுக்குள்ளாகவே ஏற்பட்டிருக்கக் கூடாது என்று தடுக்கக் கூடிய இயற்கைவிதி எதுவும் இல்லை. அப்படி ஒரு திங்கள் ஏற்பட்டிருக்குமேயானால், இப்பொழுதுள்ள திங்கள் உலகை ஒரு மாத காலத்தில் ஒரு தடவை சுற்றுகிறது என்றால் அந்தத் திங்கள் ஒரு மாதகாலத்தில் பத்து தடவைகள் சுற்றும். காரணம் உலகிற்கு அருகில் வரவர ஈர்ப்பாற்றல் மிகவாகக் காணப்படுவதேயாகும். அந்தத் திங்கள் மணி ஒன்றிற்கு சரியாக 18000 மைல் வேகத்தில் சுற்றும் என்று வைத்துக்கொண்டால், உலகைச் சுற்றி முடிக்க அதற்கு $1\frac{1}{2}$ மணி நேரந்தான் பிடிக்கும்.

இதிலிருந்து பெறப்படுவது என்னவென்றால், உலகக் காற்று மண்டலத்திற்கு மேலே மணி ஒன்றுக்கு 18000 மைல் வேகத்தில் நகரக்கூடிய பொருள் ஒன்றை வைத்தால் அது கீழே விழாது உலகோடு சேர்ந்து சுற்றிக் கொண்டேயிருக்கும். அதற்குப் பிறகு அந்தப் பொருளை நகர்த்த நெருப்பு தேவையில்லை, நீராவிப் பொறி தேவையில்லை, மின்பொறி தேவையில்லை, உலகின் ஈர்ப்பு ஆற்றலால் சுழன்று கொண்டேயிருக்கும். அதனை மீண்டும் உலகிற்குக் கொண்டுவர வேண்டுமாயின் அதன் வேகத்தைக் குறைக்கப் பெருமுயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும், வேகம் குறைந்தால் அது தானே உலகில் வந்து விழுந்துவிடும். காற்று மண்டலத்துக்கு அப்பால் வானவெளியில் காற்றேயில்லாத தால், இயக்கும் பொருளைத் தடுக்கும் தடை ஏதும் இருக்காது. மேலும் அது ஓசையில்லாமல் இயங்கும்போது அது நகர்கிறது என்ற உணர்வேகூட இருக்காது. அது ஒரு படகு என்று வைத்துக்கொண்டால், அந்தப் படகும் அதனுள் உள்ள பொருள்களும் பளுவுடையனவாகத் தென்படமாட்டா.

வானவெளியில் பொருள்கள் எடையில்லாமல் இருக்கும் தன்மையை அறிவியல் அறிவு படைத்தவர்களால்தான் உணர்ந்து கொள்ளமுடியும். உலகைத் தவிர வேறொரு கோளாலோ அல்லது பொருளாலோ அந்தப் படகு ஈர்க்கப்படும் என்று சொல்லுவதற்கில்லை. ஏனெனில் உலகின் ஈர்ப்பாற்றல் பல இலட்சக்கணக்கான மைல்களுக்குச் சென்றிருக்கும் என்பதை முன்பே கண்டோம், காற்றுமண்டலத்துக்கு மேல் சுற்ற விடப்படும் படகு உலகப்பரப்பின்மேல் இருக்கும் போது எவ்வளவு வலிவுடையதாக இருக்கிறதோ, அதே வலிவுடன் அது வானவெளியில் சுற்றும் போது பளு இருக்காது.

பளு பொதுவாக இரண்டு வகைப்படும். ஒருவகை ஈர்ப்பினால் ஏற்படும்; மற்றொருவகை இயக்கத்தால் ஏற்படும். ஈர்ப்பாற்றல் கோளுக்குக்கோள் வேறுபடும். உலகில் சுமார் 180 பவுண்டு எடையுள்ள மனிதன், திங்களில் போய் நிற்பானேயானால் 30 பவுண்டு எடைதான் இருப்பான்; அவனே வியாழனில் போய் நிற்பானேயானால் 480 பவுண்டு எடை இருப்பான். வானவெளியில் சுற்றும் படகுக்கு ஈர்ப்பாற்றல் பளு இருக்காது, இயக்குவிக்கும் ஆற்றல்பளுதான் ஏற்படும்.

ஈர்ப்பு ஆற்றலால்தான் வானில் பூத்த நிலவு விழாமலிருக்கிறது; அண்டத்திலுள்ள அனைத்து உறுப்புக்களும் விழாமலிருக்கின்றன.

—"மன்றம்"

வயிற்றுப் புண்

[டாக்டர் ஸி. ஆர். ஆண்டர்ஸன், எம். டி.]

"டாக்டர், எனக்கு வயிற்றில் ஆகாரம் இல்லாத நேரங்களில் கடுமையான வயிற்றுவலி உண்டாகிறது. ஒவ்வொரு சமயம் வேதனை தாங்க முடியவில்லை. இதற்கு வைட்டமின்-ஏ-உபயோகிக்கலாமா?"

"உபயோகிக்கலாம். அதனால் ஒரு கெடுதியும்விளையாது. ஆனால் நீங்கள் இப்போது உடனடியாகச் செய்யவேண்டிய காரியம் அது அல்ல. பெரிய ஆஸ்பத்திரியில் காட்டுங்கள். அல்லது ஒரு நல்ல கிளினிக்குக்குப் போகலாம். அங்கே டாக்டர்கள் அநேகமாக உங்கள் இரைப்பையையும் பித்தப் பையையும், ஒரு வேளை பெருங் குடலையும் கூட எக்ஸ்-ரே படம் பிடிப்பார்கள். இன்னும் உங்கள் பாசகத்தையும் இயற்கைக்கு அதிகமாக இருக்கிறதா அல்லது குறைவாக இருக்கிறதா என்றும அவர்கள்பார்க்க விரும்பலாம். பாசகம் என்ன என்று உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். அது இரைப்பையில் ஊறும் ஒரு புளிப்புள்ள நீர். நாம் உண்ணும் உணவை அன்னப் பாகாக மாற்றுவது அதுதான். அதைச் சோதிப்பார்கள்."

"எப்படிச் சோதிப்பார்கள்?"

"உங்கள் தொண்டை வழியாக இரைப்பைக்குள்ளே ஒரு சிறிய ரப்பர்க் குழாயைச் செலுத்தி, கொஞ்சம் நீர் எடுத்துச் சோதிப்பார்கள்."

"இப்படிச் சோதித்து, வியாதியைக் கண்டுபிடித்துவிட முடியுமா?"

"உங்கள் இரைப் பையிலே பாசக நீர் அதிகமாக இருந்தால், அநேகமாகப் புண் இருக்கும்; அல்லது கடுமையான அழற்சியாக இருக்கலாம். அது போதிய அளவு இல்லாவிடில், வேறு வியாதி என்று தெரிந்து கொள்வார்கள்."

"அப்படியா? புளிப்புச் சத்து குறைவாகச்சுரப்பதும் உண்டா?"

"உண்டு. சில குடும்பங்களிலே இந்தக் குறைபாடு பரம்பரை பரம்பரையாக வருகிறது. வேறு அநேகருக்கு எக்காரணத்தினாலோ கிழப்பருவத்திலே அது வற்றிப்போகிறது."

"அவர்களுக்கு என்ன சிகிச்சை செய்வீர்கள்?"

"ஒவ்வொரு ஆகாரத்துக்கு முன்னரும் சிறிதளவு ஹைட்ரோகுளோரிக் ஆஸிட் உட்கொள்ளச் சொல்வோம். இன்னும் ஆஸிடுலின் போன்ற வேறு மருந்துகளும் இருக்கின்றன."

"பாசகம் குறைவாக ஊறும் ஒரு நோயாளிக்கு அதே சமயத்தில் புண்ணும் இருக்கலாமோ?"

"இருக்கலாம். அந்தப் புண்ணை அதிக சாக்கிரதையாகப் பார்க்க வேண்டும். அது பெரும்பான்மையும் சாதாரணப்புண்ணாக இராது; புற்றாக இருக்கும்."

***

"இரைப்பையில் அதிகப் பாசக நீர் இருக்கையில் உண்டாகும் இரணமும் புற்றாக இருக்கலாம், அல்லவா?"

"இருக்கலாம். ஆனால் அது அவ்வளவு சாதாரணம் அல்ல. ஆனால் இந்தப் புண்கள் எல்லாம் புற்று அல்லாவிட்டாலும், இவைகளும் ஆபத்தை உண்டுபண்ணக் கூடியவைதான்."

"எந்தவிதத்திலே, டாக்டர்?"

"அவை மெது மெதுவாகச் சதையைத் தின்று, அவாரம் பண்ணிவிடும். அப்போது இரைப்பையில் கிடக்கும் உணவு முதலியவை அந்தப் பொத்தல் வழியாக, மேலே வயிற்று உறுப்புகளை எல்லாம் மூடிக்கொண்டு இருக்கும் பெருட்டோனியம் என்ற வயிற்றுப் பைக்குள்ளே பாய்ந்து, அங்கே கடுமையான அழற்சியை உண்டுபண்ணும். இது அஞ்ச வேண்டிய ஒரு சம்பவம். இதைப் பெரிட்டோனைட்டிஸ் என்று கூறுவார்கள். தமிழிலே வ்பஸ்தாபனம் அல்லது வயிற்றுப்பை வீக்கம் என்று சொல்லலாம். முன்னெல்லாம் இந்த வியாதியினால் எத்தனையோ பேர் மாண்டார்கள். ஆனால் புதிதாக ஆண்டிபையாட்டிக் மருந்துகள் வந்தபிறகு, அதனால் அவ்வளவு அபாயம் இல்லை. எனினும் அது ஏற்படாமல் காத்துக்கொள்ளவேண்டும்."

"இரைப்பைக்குள்ளே இரணம் எப்படி ஏற்படுகிறது?"

"அதன் அடிப்படையான காரணம் இன்னும் உறுதியாகவில்லை. ஒருகால் புண் உண்டாவதற்கு வெகு காலத்திற்கு முன்பு இருந்தே அந்த இடத்தில் இரத்த ஓட்டம் குறைவாகவோ, அல்லது நரம்புகள் மிகவும் கிளர்ச்சியாகவோ இருக்கும். அல்லது இந்த இரண்டு காரணங்களுமே செயல்படலாம். எப்படியோ அந்த இடத்திலே தசையானது சீர்கெட்டு, வலு குன்றிப்போகிறது. பின்பு அதிலேசீரணநீர்கள்மெல்ல மெல்ல அரித்துத் தின்று, புண்ணாகிவிடுகின்றன. சாதாரணமாக வெறும் வயிற்றோடு இருக்கும் காலங்களில் தான் வயிற்றுவலி காணும். ஆனால் சில சமயம் ஆகாரம் உண்ட உடனே உண்டாகும்; அதுவும் முக்கியமாக ஆகாரத்திலே முரட்டு வகைகள் அதிகம் சேர்ந்தால் வயிற்றுவலி ஏற்படும். அவை புண்ணிலே குத்திக் குத்தி, ஆறாமல் தடுத்துவிடுகின்றன."

***

"முரட்டு வகைகள் என்று எந்தப் பதார்த்தங்களைக் குறிப்பிடுகிறீர்கள், டாக்டர்?"

"முட்டைக் கோசு, காலிப்பூ, இலெட்டூசு, மஞ்சள் முள்ளங்கி, தவிடு, குறுநொய், பருபருக்கை யான மா, இவற்றைச் சொல்லு கிறேன். இவை எல்லாம் சீரிய உணவுகள் என்பதில் ஐயமில்லை. ஆனாலும் வயிற்றிலே இரணம் இருக்கிறபோது, இவைகளைச் சொற்பமாகவே சேவிக்கவேண் டும். முற்றும் விடக்கூடுமானால் மேல்."

"புண் ஆறின பிறகு சாப்பிட லாம், அல்லவா?"

"மிதமாகச் சாப்பிடலாம். ஆனால் சிலருக்கு அது தானும் ஆகாது."

"டாக்டர், சிலபேருக்கு மலம் கீலைப்போல் கறுத்து இருப்பதற் குக் காரணம் என்ன?"

"இரும்பு சேர்ந்த மருந்துகளை உட்கொள்வதால் ஒவ்வொரு சம யம் அப்படி வரலாம். ஆனால் பெரும்பாலும் இரத்தப்பெருக்கே அதற்குக் காரணம். அனனப் பையிலிருந்தாவது மேல் குடலி லிருந்தாவது இரத்தம் கசிந்து கொண்டிருக்கலாம். கசிந்த இரத் தமானது குடலில் இலேசாகச் சீரணமாகி, தன் நிறத்தை இழந் துவிடுகிறது. ஆகையாலேயே அது வெளியே வரும்பொழுது கறுப்பாகத் தோன்றுகிறது."

"இரைப்பைக்குள்ளே இரத் தப் பெருக்கு எப்படி ஏற்படு கிறது."

"இரைப்பை அல்லது சிறுகுட லிலே உண்டான புண் சில சம யம் அருகில் இருக்கும் இரத்தக் குழாயைச் சிறிது சிறிதாகத் தின் றுவிடும். அப்பொழுது அதிலி ருந்து இரத்தம் ஒழுகிக்கொண் டே இருக்கும்."

"அதை நிறுத்துவதற்கு ஏதா கிலும் வழி இருக்கிறதா, டாக் டர்?"

"இரத்தப்பெருக்கு அதிகமாக இருப்பதாகத் தெரிந்தால், டாக் டர்கள் சில சமயம் நோயாளியின் தொண்டை வழியாக ஒரு விதக் குழாயை உள்ளே விடுவார்கள். அதன் கடைசியில் இரண்டு பலூன்கள் இருக்கும். குழாயை இரைப்பைக்குள்ளே சரியாய் வைத்துக்கொண்டபிறகு, பலூன் களில் காற்று அடைப்பார்கள். அப்போது அவை ஊதிக்கொண்டு அந்த இரத்தம் ஒழுகும் இடத்தி லே பலமாக அழுத்தி, அதை நிறுத்தும்."

"ஆனால் தொண்டைக்குள்ளே குழாயை வைத்துக் கொண்டிருந் தால்,நோயாளி எப்படிச் சாப்பிட முடியும்?"

"அந்தக் குழாய் மூலமாகவே அவருக்கு நீரான ஆகாரங்களை ஊட்டுவார்கள்."

"ஆச்சரியமாக இருக்கிறதே!"

"ஆச்சரியம்தான். இந்தக் கால த்திலே வைத்திய சாஸ்திரம் மிக வும் வியப்பான முன்னேற்றம்

(அடுத்த பக்கம் பார்க்க)

உடையும் ஒழுக்கமும்

(பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனுர்)

மொழி என்பது, பேசுவோர் தம் கருத்தை விளக்குவதற்காக உதவுவது என்று பொதுவாக அறிஞர் கருதிவருகின்றனர். ஆனல், அதுமட்டும் அல்லாமல், நேர்மாருன மற்ருெரு பயனுக்கும் மொழி உதவுகிறது. வஞ்சகம், பொருமை முதலியவற்ருல் மாசுபட்ட உள்ளம் உடையவர்கள் தம் உள்ளத்தின் குறையை மறைப்பதற்கும் மொழி உதவியாக உள்ளது. அதுபோலவே, மக்கள் உடுக்கும் உடையும் இருவகையிலும் பயன்படுவதாகக் கூறலாம். உடம்பின் அழகை விளக்குவதற்கும் உடை பயன் படுகிறது; உடம்பின் குறையை மறைப்பதற்கும் உடை பயன் படுகிறது.

திரண்ட தோளும் பரந்த மார்பும் உடைய இளைஞர்களின் உடலமைப்பை எடுத்துக் காட்ட அவர்களின் 'கோட்' என்னும் உடை வகை பயன்படுகிறது. அதுவே, மெலிந்த தோளும் எலும்பு மார்பும் உடையவர்களின் உடல் குறையை மறைப்பதற்கும் பயன்படுகிறது. இவ்வாறே, பெண்களின் உடல் அமைப்பை நன்ருக விளக்குவதற்கும் கச்சு முதலிய உடை வகைகள் பயன் படுகின்றன. அவர்களின் உடல் வளர்ச்சியில் உள்ள குறையை மறைப்பதற்கும் அதே உடைகள் பயன் படுகின்றன.

தொடக்கக் காலத்தில், உடை, அழகை விளக்கப் பயன்பட்டதா? குறையை மறைக்கப் பயன் பட்டதா? அப்போதும் இரண்டு வகைக்காகவும் பயன்பட்டிருக்க வேண்டும் என்று கூறலாம். முதலில் எதற்குப் பயன்பட்டது என்று இப்போது வரையறுத்துக் கூற முடியாது. ஒருவனே ஒருத்தியோ தன் உடலின் குறையை மறைப்பதற்காக ஒரு புதர் அல்லது செடி கொடிக்குப் பின் மறைந்து நின்றிருக்கலாம். பிறகு அந்தச் செடி கொடியின் பகுதியை ஒடித்துத் தன் உடலை மூடியவாறே வெளியே வந்திருக்கலாம். அல்லது ஒருவனே ஒருத்தியோ செடி கொடியின்

(முன்பக்கத் தொடர்ச்சி)

அடைந்துள்ளது. சமீப காலம் வரை மக்களைக் கதிகலங்கச் செய்த எத்தனையோ நோய்களைத் தடுக்கும் வழிகளும், அவற்றிற்கான சிகிச்சை முறைகளும் இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அற்புதமான மருந்துகளும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். எந்த வியாதியையும் அலட்சியம் பண்ணக் கூடாது. ஆரம்பத்திலேயே தகுந்த மருத்துவர்களிடம்காட்டி, பரிகாரம் தேடவேண்டும்.''

—''நல்வழி''

பின் நின்றபோது அழகாகத் தோன்றுவதைக்கண்ட மற்றொருவன் அல்லது மற்றொருத்தி. அந்தச் செடி கொடியை ஒடித்து அவனுடைய அல்லது அவளுடைய உடல்மேல் வைத்து அழகைப் பாராட்டியிருக்கலாம். பழைய இலக்கியத்தில் வரும் தழையாடை இதை நினைவுப்படுத்துவதாக உள்ளது. தழையும் பூவும் முதலில் பயன்பட, பிறகு விலங்குகளின் தோலும் பறவைகளின் இறகும் பயன்பட்டிருக்கவேண்டும். ஐரோப்பியர்கள் இன்னும் பலவகைத் தோல்களையும் இறகுகளையும் அழகுக்காகப் பயன்படுத்தக் காண்கிறோம். அதன் பிறகு கம்பளியும் பருத்தியும் ஆடையாக நெய்யப்பட்டு உடை வகைகள் தோன்றின. எல்லாம் மேற்கூறிய இரண்டு வகைக்கும்—குறையை மறைக்கவும் அழகை விளக்கவும்—பயன்படுவனவே.

மேற்குறித்த இருவகைப பயன மட்டும் அல்லாமல், மூன்றாவது ஒருவகை உண்டு. அது, தாங்கள் குறிப்பிட்ட ஒரு கூட்டத்தைச் சார்ந்தவர்கள் என்பதற்காக உடையைப் பயன்படுத்தும் முறையாகும். பௌத்தத் துறவிகள் ஒருவகை உடை உடுத்துதல், கிறிஸ்துவப் பாதிரிமார்கள் ஒருவகை உடை உடுத்துதல் முதலியன சமயத்துறையில் இவ்வாறு ஏற்பட்டவை. ஒரு கல்விக் கூடத்தில் கற்கும் மாணவர்கள் ஒருவகை உடை உடுத்துதல், ஓர் அலுவலகத்தைச் சார்ந்தவர்கள் ஒரு வகை உடை அணிதல், காவல் (போலீசு) முதலிய துறையைச் சார்ந்தவர்கள் ஒரே வகையாக உடுத்தல், பட்டாளத்தைச் சார்ந்த வீரர்கள் ஒரே வகை ஆடை உடுத்தல் முதலியனவும் இவ்வகையானவை. சில விழாக்களின்போதும், பட்டமளிப்பு முதலிய சிறப்பு நிகழ்ச்சிகளின் போதும் ஒரேவகை உடையை நாடுதல் உண்டு. இவை எல்லாம் அந்தந்தக் கூட்டத்தார் தம்முடைய தனிச்சிறப்பை விளக்குவதற்காக உடையைப் பயன்படுத்தும் முறை எனலாம். நாட்டுக்கு நாடு உடையில் காணப்படும் வேறுபாடும் இவ்வகையானதே. ஆனால், இதில் வேறு ஒரு காரணமும் உள்ளது. அதாவது, குளிர் நாடுகளில் உடலை நன்கு இறுக்கமாக மூடும் உடையும், வெப்ப நாடுகளில் உடலை இறுக்காமல் தளர்த்தலாக அணியும் உடையும் தேவைப்படுகின்றன. இது இயற்கையின் கட்டளையும் சேர்ந்தமைந்த முறை எனலாம்.

ஒழுக்கம் என்பது உள்ளத்து உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு, அவரவர்களின் பேச்சிலும் செயலிலும் வெளிப்படுவதாகும். வாழ்க்கையில் தன்னைத் தான் காத்துக்கொண்டு பிறர்க்கு உதவியாக வாழும் முறையே ஒழுக்க விதிகள் எல்லாவற்றிற்கும் அடிப்படையாகும். தனக்குத் தீமையாக இருத்தலோடு, பிறர்க்கும் கேடு விளைத்தலால், பொய், பொறாமை, கள், விப

சாரம், திருடு முதலியன வெறுத்து ஒதுக்கப்படுகின்றன; நல்லொழுக்கத்திற்கு ஆகாதவை என்று கடியப்படுகின்றன.

உடைக்கும் ஒழுக்கத்திற்கும் தொடர்பு உண்டு. உள்ளத்து உணர்ச்சி பேச்சிலும் செயலிலும் புலப்படுவது போலவே, நடையிலும் உடையிலும் புலப்படுகிறது. நல்ல உணர்ச்சிக்கு ஏற்ப, நல்ல பேச்சும் நல்ல செயலும் காணப்படும்; அவர்களின் பேச்சாலும் செயலாலும் தீமை விளையாத நிலையே நல்ல ஒழுக்க நிலை ஆகும். அதுபோலவே, ஒருவர் உடுக்கும் உடையால், அவர்க்கும் தீமை இல்லாமல் அவரைச் சார்ந்தவர்க்கும் தீமை இல்லாமல் இருந்தால், அந்த உடை அவருடைய நல்லொழுக்கத்திற்கு ஏற்ற உடை என்று கூறலாம்.

உடலின் குறையை மறைப்பதற்காக உடுத்தல், சமுதாயக் கட்டுப்பாட்டுக்காக உடுத்தல், இயற்கையின் கட்டாயத்திற்காக உடுத்தல் இந்த மூன்று வகையாலும் யார்க்கும் எந்தத் தீமையும் இல்லை; ஆகையால் ஒழுக்கக் கேட்டுக்கு வழியே இல்லை.

ஆனால் உடலின் அழகை விளக்குவதற்காக உடுத்தல் என்ற ஒருவகையில் மட்டும் நன்மையும் உண்டு; தீமையும் உண்டு. அழகை விளக்குவது என்பதில், ஓர் எல்லை வரையில் வாழ்வுக்குப் பயன் உண்டு; அந்த எல்லை கடந்தால், தனக்கு மட்டும், பயன்பட்டு, பிறர்க்குத் தீமையும் விளைக்கிறது. உப்பு ஓர் எல்லை வரையில் சுவை தந்து, அந்த எல்லை கடந்தால் சுவையைக் கெடுப்பது போன்றது இது.

பெற்றோர் மகிழும்படியாக, சுற்றுப்புறத்தார் மகிழும்படியாக உடுத்துவது சிறுவர் கடமை; இளைஞரின் கடமையும் அதுவே. கணவன் மகிழும்படியாக மனைவி உடுக்கவேண்டும்; மனைவி மகிழும்படியாகக் கணவன் உடுக்க வேண்டும்; அவைகளும் கடமையே. மற்றவர்கள் அழகாகத் தோன்றுவது போலவே, தானும் அழகாகத் தோன்ற வேண்டும். இல்லையானால் மற்றவர்களின் மகிழ்ச்சியில் குறை ஏற்படும். இங்கே எவ்வளவு அழகாக உடுக்கவேண்டும் என்பதற்கு ஓர் அளவுகோல் உண்டு. அதாவது, சமுதாயத்தில் பெரும்பாலோர் உடன்பட்ட உடையே போதும் எனக்கொள்ள வேண்டும். அது காலத்திற்குக் காலம் மாறும். ஒரு காலத்தில் பெரும்பாலோர் கடிந்து விலக்கிய உடையையே, மற்றொரு காலத்தில் பெரும்பாலோர் ஏற்றுக் கொள்வார்கள். ஒரு காலத்தில் உடன்பட்டதை மற்றொரு காலத்தில் விலக்குவார்கள். ஆகையால், அந்தந்தக் காலத்தில் சமுதாயத்தில் போற்றப்படும் உடையைக் கொள்வது நல்லது. அந்த உடையைக் கொண்டு அழகை விளக்கினால் போதும் என்ற மன நிறைவு வேண்டும்.

இவ்வாறு நோக்கம் தெளிவாக அமைந்து விட்டால்,

(38-ம் பக்கம் பார்க்க)

Edted, Priinted and Published by P. VEERARAGHAVAN, at Venkatesan Press, 2-65, Broadway, Madras—1.

எமது

வெளியீடுகள்

ஆரம்பப் பாடசாலைகளுக்கும்,
உயர்தரப் பாடசாலைகளுக்கும்

புதிய பாடத் திட்டப்படியும், பழைய பாடத் திட்டப்படியும் இயற்றப்பட்ட

புத்தகப் பட்டியல்

1959

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

('ஆரம்பக் கல்வி' ஆபீஸ்)

94/95, புதுத் தெரு, மண்ணடி, சென்னை-1.

தபால் பெட்டி எண் 1818. :: டெலிபோன் எண் 55844.

ஓர் வேண்டுகோள்

★

கடந்த ஆண்டு புதிய பாடத் திட்டப்படி ஒன்று முதல் மூன்று வகுப்பு வரையிலும், பழைய பாடத் திட்டப்படி 4, 5 வகுப்புகளுக்கும், உயர்தர வகுப்புகளுக்கும், எமது "திரு. வி. க. தமிழ் வாசகங்கள்." "வீரபாண்டியன் தமிழ் வாசகங்களை" அல்லது மற்ற பாட புத்தகங்களை வைத்து ஆதரித்த ஆசிரியப் பெருமக்களுக்கும் மானேஜர்களுக்கும் எமது நன்றி.

அவ்வாறே இவ்வாண்டும் புதிய பாடத் திட்டப்படி 1 முதல் 4 வது வரையிலும், பழைய பாடத் திட்டப்படி 5-ஆம் வகுப்புக்கும் எமது 'ஆரம்பக் கல்வி'யில் வெளியிடப்பட்ட புத்தகங்களை வைத்து ஆதரிக்கும்படி மிகவும் வேண்டுகிறோம். 1 முதல் 5 வரையிலும் உள்ள தமிழ் வாசகங்கள் அல்லது இதர பாட புத்தகங்களுக்கு ரூ. 50 க்குக் குறையாமல் ஆர்டர் கொடுத்து ஆதரிக்கும் எய்டெட், பஞ்சாயத்து, லேபர் ஆரம்பப் பாடசாலைகளுக்கு எமது 'ஆரம்பக் கல்வி' மாதப் பத்திரிகை இலவசமாக மாதா மாதம் அனுப்பி வைக்கப்படும்.

சென்ற ஆண்டு காகித விலை, அளவுக்கு மற உயாநதுவிட்டதால் நாங்கள் 20 சத விகிதக் கழிவைக் குறைத்து 15 சத விகித கழிவு தந்துள்ளோம். அதனை வருத்தமின்றி ஏற்றுக்கொண்ட நண்பர்களுக்கு எமது நன்றி.

இவ்வாண்டும், காகித விலை குறையாமல் அப்படியே இருப்பதால், 1, 2, 3 வகுப்புகளுக்கு உள்ள வீரபாண்டியன் & திரு. வி. க. தமிழ் புத்தகங்கள் இவைகளுக்கு மட்டும், 15 சத விகிதக் கழிவு தரவும், 4-வது 5-வது தமிழ் புத்தகங்களுக்கும் 2 முதல் 5 வரையில் உள்ள இதர உப பாடங்களுக்கு 20 சத விகிதமும் தருவது என்று முடிவு செய்து இருக்கிறோம். இதனை ஆசிரிய நண்பர்கள் ஏற்றுக்கொள்வார் என்பது எமது நம்பிக்கை.

மாதிரிப்பிரதிகள் வேண்டுவோர் சென்ற ஆண்டு புதிய பாடத் திட்டப்படி வைத்த புத்தகங்கள் போக, இவ்வாண்டு புதிய பாடத் திட்டப்படி உள்ள 4-ம் வகுப்பு புத்தகத்திற்கும், பழைய பாடத் திட்டப்படி 5-ம் வகுப்புக்கு மாற்றம் செய்யும் திட்டம் இருந்தால் அவைகளுக்கு மட்டும் மாதிரிப் பிரதிகளுக்கு எழுத வேண்டுகிறோம்.

1 முதல் 3 வரை தமிழ் புத்தகங்களுக்கு இவ்வாண்டு மாதிரிப் பிரதிகளுக்கு எழுத வேண்டாம் என்று உங்களைப் பணிவுடன் வேண்டுகிறோம்.

இவ்விலைப்பட்டியலில் ஆங்காங்கு புத்தகத்தின் கீழ் குறித்துள்ள தொகைக்குத் தபால் பில்லைகளையோ அல்லது M. O. மூலமோ அனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

'ஆரம்பக் கல்வி' ஆபீஸ், சென்னை.

★

ஆரம்பப் பள்ளிகளுக்கான எமது வெளியீடுகள்

திரு. வி. க. தமிழ் வாசகம்

ஆசிரியர் :

பி. வீரராகவன்.

	புத்தகத்தின் விலை			கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
முதல் வகுப்பு	0	5	0	3	28–5–'58
இரண்டாம் வகுப்பு	0	6	0	3	28–5–'58
மூன்றாம் வகுப்பு	0	8	0	3	28–5–'58
நான்காம் வகுப்பு	0	12	0	21	13–5–'59
ஐந்தாம் வகுப்பு	0	10	0	3	9–4–'58

4, 5 தமிழ்ப் புத்தகங்கள் மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் 70 ந. பை. அனுப்பவும்.

வீரபாண்டியன் தமிழ் வாசகம்

ஆசிரியர் :

இராசாம்பாள் கோவிந்தராசன், M. A., L. T.

முதல் வகுப்பு	0	5	0	10	28–5–'58
இரண்டாம் வகுப்பு	0	6	0	5	28–5–'58
மூன்றாம் வகுப்பு	0	8	0	5	28–5–'58
நான்காம் வகுப்பு	0	12	0	21	13–5–'59
ஐந்தாம் வகுப்பு	0	10	0	3	9–4–'58

4. 5 தமிழ்ப் புத்தகங்கள் மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் 70 ந. பை. அனுப்பவும்.

* புதிய பாடத் திட்டப்படி எழுதப்பட்டது.

இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

ஆசிரியர் :

M. விவேகானந்தா, B. Sc., L. T.

	புத்தகத்தின் விலை			கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
இரண்டாம் வகுப்பு	0	6	0	...	...
மூன்றாம் வகுப்பு	0	7	0	...	...
*நான்காம் வகுப்பு	0	10	0	30	13–5–'59
ஐந்தாம் வகுப்பு	0	8	0	9	10–4–'57

இந்த நான்கு புத்தகங்கள் மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் ரூ. 1-25 ந. பை. அனுப்பவும்.

புதிய தேச ஆட்சி முறை

ஆசிரியர் :

D. சிவசங்கர ராவ், B. A., L. T.

ஐந்தாம் வகுப்பு	0	8	0	10	4–4–'56

மாதிரிப் பிரதிக்கு 25 ந. பை. அனுப்பவும்.

நம் நாட்டு வரலாறு

ஆசிரியர்கள் :

M. தக்ஷிணாமூர்த்தி, B. A., B. T.

T. S. உமாபதி, M. A., L.T.

ஐந்தாம் வகுப்பு	0	9	0	2	30–4–'58

மாதிரிப் பிரதி வேண்டுவோர் 40 ந. பை. அனுப்பவும்.

---

* புதிய பாடத் திட்டப்படி எழுதப்பட்டது.

சிறுவர் கணக்கு நூல்

ஆசிரியர் :

பி. வீரராகவன்

	புத்தகத்தின் விலை			கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
இரண்டாம் வகுப்பு	0	8	0	...	...
* மூன்றும் வகுப்பு	0	12	0	43	13-5-'59
* நான்காம் வகுப்பு	0	14	0	25	13-5-'59

இம் மூன்று புத்தகங்கள் மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் ரூ. 1–40 ந. பை. அனுப்பவும்.

புதுமுறை சங்கக் கணிதம்

ஆசிரியர் :

K. வீராசாமி, B.A., L.T.

ஐந்தாம் வகுப்பு	0	12	0	5	10–4–'57

இதை மாதிரிப் பிரதி வேண்டுவோர் 37 ந. பை. அனுப்பவும்.

சிறுவர் சமூக நூல்

ஆசிரியர் :

பி. வீரராகவன்

இரண்டாம் வகுப்பு	0	10	0	...
மூன்றும் வகுப்பு	0	12	0	...
* த. சே. உமாபதி எழுதியது.				
நான்காம் வகுப்பு (மாவட்டங்கள்)	1	14	0	அங்கீகாரம் பெற்றது.

இந்த மூன்று புத்தகங்கள் மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் ரூ. 2 அனுப்பவும். (நான்காம் வகுப்பு மட்டும் வேண்டுவோர் ரூ. 1·30 ந. பை. அனுப்பவும்.)

---

* புதிய பாடத் திட்டப்படி எழுதப்பட்டது.

சிறுவர் பூகோளம்

ஆசிரியர் :

V. K. சேஷாத்திரி, B. A., L. T.

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
ஐந்தாம் வகுப்பு	0 12 0	9	4-4-'56

மாதிரிப் பிரதி வேண்டுவோர் 50 ந. பை. அனுப்பவும்.

புதிய பாடத் திட்டப்படி

*4-ஆம் வகுப்பிற்கானவை

திரு. வி. க. தமிழ் வாசகம்

ஆசிரியர் : பி. வீரராகவன்.

விலை 12 அணா

சிறுவர் கணக்கு நூல்

ஆசிரியர் : பி. வீரராகவன்.

விலை 14 அணா

இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

ஆசிரியர் : M. விவேகானந்தா.

விலை 10 அணா

சிறுவர் சமூக நூல்

(மாவட்ட வாரியாக)

ஆசிரியர் : த. சே. உமாபதி.

விலை ரூ. 1-14-0.

---

* அங்கீகாரம் பெற்றது.

புதிய பாடத் திட்டப்படி

சமூக பாடப் பயிற்சி நூல்

(*மாவட்டவாரியாக*)

ஆசிரியர் : த. சே. உமாபதி.

ஒவ்வொன்றும் 55 காசு

இந்த 5 புத்தகங்களையும் மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் ரூ. 2·75 ந. பை M.O மூலம் அனுப்பவும்.

★

*4-ஆம் வகுப்பிற்கானவை

வீரபாண்டியன் தமிழ் வாசகம்

ஆசிரியர் : இராசாம்பாள் கோவிந்தராசன்

விலை 12 அணா.

சிறுவர் கணக்கு நூல்

ஆசிரியர் : பி. வீரராகவன்.

விலை 14 அணா.

இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

ஆசிரியர் :

M. விவேகானந்தா, B. Sc. L. T.

விலை 10 அணா.

சிறுவர் சமூக நூல்

(*மாவட்டவாரியாக*)

ஆசிரியர் : T. S. உமாபதி.

விலை ரூ. 1-14-0.

**அங்கீகாரம் பெற்றது.*

புதிய பாடத் திட்டப்படி

சமூக பாடப் பயிற்சி நூல்

(மாவட்ட வாரியாக)

ஆசிரியர் : T. S. உமாபதி.

ஒவ்வொன்றும் 55 காசு

இந்த 5 புத்தகங்களையும் மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் ரூ. 2·75 ந. பை.–க்கு M. O. செய்யவும்.

★

சிறுவர் சமூக நூல்

4-ஆம் வகுப்பு

ஆசிரியர் :

த. சே. உமாபதி, M.A., L.T. (Dip. in-Geog.)

மாவட்டங்கள்		கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
1	சென்னை	44	13-5-'59
2	செங்கற்பட்டு	44	,,
3	தென்னார்க்காடு	44	,,
4	வட ஆற்காடு	44	,,
5	திருச்சி	46	,,
6	தஞ்சாவூர்	46	,,
7	கோயமுத்தூர்	44	,,
8	சேலம்	44	,,
9	நீலகிரி	46	,,

ஒவ்வொன்றும் விலை ரூ. 1·87 ந. பை.

மாதிரிப் பிரதி வேண்டுவோர் (ஒவ்வொன்றுக்கும்) ரூ. 1·30 ந. பை. அனுப்பவும்.

புதிய பாடத் திட்டப்படி :

சமூக
பாடப் பயிற்சி நூல்

4-ஆம் வகுப்பு

ஆசிரியர் :

த. சே. உமாபதி, M. A., L. T.

★

புத்தகத்தைப் பற்றிய குறிப்பு

சமூக பாடத்தைக் கற்பிக்கும்போது பாடங்களை மட்டும் கற்பிப்பது பயனற்றது என்பது அறிஞர்களின் கருத்து. இது பற்றியே பாடத் திட்டத்திற் செய்முறைகள் தனியே தரப்பட்டுள்ளன. அச் செய்முறைகளை மேற்கொள்ள ஆரம்பப் பள்ளிகள் எல்லாவற்றிலும் ஏற்ற சூழ்நிலை இருப்பது அரிது. ஆதலால், இத்தகைய சமூக பாடப் பயிற்சி நூல் அத்தகைய குறையை நீக்கி குழந்தைகட்குச் சிறந்த முறையில் செய்முறைப் பயிற்சி அளிக்க உதவும் என்பது உறுதி. இந்நூல் சமூக பாட நூல்கள் எழுதுவதில் நீண்ட அனுபவமுள்ள திரு T. S. உமாபதி, அவர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டிருப்பதால் இதன் சிறப்பைப் பற்றி அதிகம் கூற வேண்டுவதில்லை.

பதிப்பாளர்.

மாவட்டங்கள்

1 சென்னை
2 தென்னார்க்காடு
3 வட ஆற்காடு
4 கோயமுத்தூர்
5 சேலம்
6 நீலகிரி
7 செங்கற்பட்டு
8 தஞ்சை
9 திருச்சி

ஒவ்வொன்றும் விலை 55 காசுகள்

புதிய பாடத் திட்டப்படி இயற்றப்பட்ட

2, 3-ம் வகுப்புகளுக்குரிய நூல்

சிறுவர் சமூக நூல்

ஆசிரியர் : பி. வீரராகவன்

இரண்டாம் வகுப்பு	*விலை*	0–10–0
மூன்றாம் வகுப்பு		0–12–0

இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

ஆசியர் : பி.வீரராகவன்

இரண்டாம் வகுப்பு	*விலை*	0–6–0
மூன்றாம் வகுப்பு		0–7–0

சிறுவர் கணக்கு நூல்

ஆசிரியர் : பி. வீரராகவன்

இரண்டாம் வகுப்பு	*விலை*	0–8–0

இந்த 5 புத்தகங்கள் மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் ரூ. 1·75 ந. பை.-க்கு M. O. அனுப்பவும்.

உயர்தர ஆரம்பப் பள்ளிகளுக்கு :

வீரபாண்டியன் தமிழ் வாசகம்

ஆசிரியர் :

வித்துவான் வை. சுப்பிரமணியம்

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
ஆறாம் வகுப்பு	0 13 0	3	10-4-'57
ஏழாம் வகுப்பு	0 14 0	2	13-5-'59

இந்த இரண்டு புத்தகங்களை மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் 87 ந. பை. தபால் பில்லை அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

புதுமுறை சங்கக் கணிதம்

ஆசிரியர்கள் :

V. K. *சேஷாத்திரி*, B. A., L. T.

V. S. *லீலா*, B. A., B. T.

ஆறாம் வகுப்பு	1 2 0	2	30-4-'58
ஏழாம் வகுப்பு	1 4 0	2	30-4-'58
எட்டாம் வகுப்பு	1 4 0	4	9-4-'58

இந்த மூன்று புத்தகங்களை மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் ரூபாய் 2-0-0 M. O. மூலம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

சமூக நூல்

ஆசிரியர் :

த. சே. உமாபதி, M. A., L. T.

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
ஆறும் வகுப்பு	1 8 0	34	13-5-'59

இதை மாதிரிப் பிரதியாக வேண்டுவோர் 62 ந. பை. தபால் பில்லை அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

சமூக நூல் பயிற்சிப் புத்தகம்

ஆசிரியர் :

த. சே. உமாபதி, M. A., L. T.

ஆறும் வகுப்பு	0 10 0	(திருத்திய பதிப்பு)
ஏழாம் வகுப்பு	0 10 0	
எட்டாம் வகுப்பு	0 10 0	

இந்த மூன்று புத்தகங்களை மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் ரூபாய் 1-0-0 அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

அநுமான முறை இலக்கணமும் உரைநடை ஆக்கமும்

ஆசிரியர்:

G. சந்திரமௌலீச்சுரன் M. A.

எட்டாம் வகுப்பு	0 12 0	33	13-5-'59

முக்கிய அறிவிப்பு

"ஆரம்பக்கல்வி" பத்திரிகை இனும்

சென்ற 1958-59 ஆண்டுக்கு எமது வேண்டுகோளுக்கிணங்க, பற்பல எயிடெட் பாடசாலை மானேஜர்களும், தலைமை ஆசிரியர்களும், பஞ்சாயத்து போர்டு தலைமை ஆசிரியர்களும் எமது பாட புத்தகங்களை வைத்தும், சிலர் எமது இதர பாட புத்தகங்களைப் பாடசாலையில் வைத்தும், ஆதரித்தமைக்கு எமது அன்பு கலந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

அம்மாதிரியே 1959-60 ஆண்டுக்கும் மீண்டும் எமது பாட புத்தகங்களைத் தொடர்ந்து வைத்து எமது பத்திரிகையை ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

இவ்வாண்டும் எமது பாட புத்தகங்களைத் தொடர்ந்து வைத்துக் கொள்ளும் தலைமை ஆசிரியர்கள், 1959-60-க்குத் தொடர்ந்து வைத்துக்கொள்வதாக, எமது அலுவலகத்திற்கு மே மீ, 30-ம் தேதிக்குள் கடிதம் மூலம் தகவல் அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவ்விதம் தகவல் அனுப்பும் பாடசாலையின் பெயர்கள் 1959-60 ஆண்டுக்கு மறுபடியும் புதிதாக ரிஜிஸ்டர் செய்யப்பட்டு வழக்கம் போல் எமது ஆரம்பக்கல்வி பத்திரிகையை இனுமாகத் தொடர்ந்து அனுப்பப்படும். புத்தகங்கள் வாங்கும் புத்தகக்கடை ரசீதுகளை (Cash Bills) அலுவலகத்திற்கு 1959 ஜூன் மாதம் 30-ம் தேதிக்குள் அவசியம் அனுப்பி விடவும். சென்னை அலுவலகத்திற்கு அனுப்பப்படும் ஆர்டர்களுக்கு அதைக் கொண்டே பெயர்கள் ரிஜிஸ்டர் செய்து பத்திரிகையை அனுப்பப்படும்.

ஆர்டர்கள் அனுப்பும்போது கவனிக்கவேண்டியவை

முன்பு தபாற் கட்டணம் 5 தோலாவுக்கு 3 ந.பை.வாகயிருந்தது தற்போது 6 ந. பை-வாக உயர்த்தப்பட்டு இருக்கிறது. அதன் காரணமாக 20 ரூபாய்க்குப் பெறுமான, சுமார் நாற்பது புத்தகங்களை தபால் மூலம் அனுப்பப்படவேண்டுமானுல் அதற்கு தபாற் செலவு 5 முதல் 6 ரூபாயாகின்றது. ஆதலால் புத்தகங்களை இரயில்வே பார்சல் மூலம் வரவழைத்துக்கொள்வது மிகவும் இலாபகரமானது. 20 ரூபாய்க்கு பெறுமான புத்தகத்திற்கு 50 ந.பை-க்கு மேல் இரயில்வே செலவு ஆகாது.

ஆதலால், நேரிடையாக சென்னை அலுவலகத்திற்கு ஆர்டர் அனுப்புபவர்கள், மறவாமல் அருகிலுள்ள இரயில்வே நிலையத்தின் (Raliway Station) பெயரை ஆர்டரில் குறிக்கும் படி கேட்டுக்கொள்ளுகிறோம். அப்படிக் குறிக்கப்படாமல் அனுப்பப்படும் ஆர்டர்கள் நிறுத்தி வைக்கப்பட்டுத் தங்கள் பதில் கிடைத்த பிறகே அனுப்பப்படும்.

கமிஷன் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை, தபால் மூலம் தான் அனுப்ப வேண்டுமென விரும்புகிறவர்கள் தங்கள் ஆர்டர்களுடன், முன் பணம் 25% சத விகிதம் M. O. மூலம் அனுப்பவும்.

இரயில்வே நிலையம் (Railway Station) அருகாமையில் இல்லாதவர்களும், மொத்தமாகச் சென்னையிலிருந்து புத்தகங்களை வரவழைத்துக்கொள்ள வசதி இல்லாதவர்களும், தங்களுக்கு அருகாமையிலுள்ள புத்தக வியாபாரிகளிடம் ஆர்டர் கொடுத்து சில்லரையாக வாங்கிக்கொள்வது இலாபகரமானதாகும்.

மாதிரிப் பிரதிகள் அனுப்பப்படும் பாடசாலைகளை ரிஜிஸ்டர் செய்து வருகிறோம். குறிப்பிட்ட பாட புத்தகங்களை ஒரு முறைக்கு மேல் எக்காரணத்தைக் கொண்டும் மறுமுறை அனுப்ப முடியாது. அப்படி மறுபடியும் பணம் அனுப்பப்பட்டால் தபாற் செலவு கழித்துக்கொண்டு மீதித் தொகையை திருப்பி அனுப்பப்படும்.

பதிப்பாளர்.

★

வெங்கடேசன் பிரஸ், 2-65, பிராட்வே, சென்னை—1.